விலை ரூபா: 10.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 தை 05 புதன்கிழமை (18.01.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 30

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## ராணுவக் காடைத்தனம் நிற்காவிடில் மக்களின் கொந்தளிப்பும் மாறாது

### சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை



(கிளிநொச்சி)

தமிழர் தாயகத்தில் இராணுவக் காடைத்தனங்களைக் கட்டுப்படுத்தா விட்டால் மக்களின் கொந்தளிப்பை மாற்றுவது கடினம் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் எச்சரித்துள்ளார்.

கிளிநொச்சியில் சு.ப.தமிழ்ச் செல்வனை நேற்று இலங்கைக் கான நோர்வே தூதுவர் ஹான் பிறட்ஸ்கர் மற்றும் இலங்கைக்கான போர்நிறுத்த கண்காணிப்புக்குழு வின் தலைவர் ஹக்ரூப் ஹொாக் லண்ட் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

இச் சந்திப்புக்களுக்குப் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் சந்திப்புக் குறித்து கருத்து வெளியிடுகையில்


தமிழ்ச்செல்வனுடன் பிறட்ஸ்கர்

நோர்வே தூதுவரை முதலில் சந் தித்தோம். தற்போதுள்ள மோச மான நிலைமைகளை அவருக்கு விவரித்தோம். (12 ஆம் பக்கம் பார்க்க)

## இனி ஒரு போதும் யுத்தம் இல்லை!

(கொழும்பு)

அரசாங்கம் ஒருபோதும் மீண்டு மொரு யுத்தத்திற்குச் செல்லாது இவ்வாறு வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண் டோப்புள்ளேநம்பிக்கைவெளியிட்டார்.

மாவத்தகமையில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் அவர் உரை யாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். ஜெயராஜ் பெர்னாண்டோப்புள்ளே

அவர் மேலும் பேசுகையில் ஜே.வி.பியுடனும் ஜாதிகஹெலஉறு மயவுடனும் அரசாங்கம் இணைந்து மீண்டும் நாட்டை யுத்தத்தை நோக்கி கொண்டு செல்வதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டினாலும் மீண்டுமொரு போதும்நாட்டை யுத்தத்தை நோக்கிக் கொண்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் மறு அறிவித்தல் வரை கண்காணிப்புக்குழுவின் பணி நிறுத்தம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு வின் பணிகள் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு நேற்று பிற்பகல் வெளியிட்ட அறிக்கையில் இத்தகவல் குறிப்பி டப்பட்டுள்ளது.திருகோணமலையில் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்ற வன்முறைகள் மற்றும் நேற்று முற்பகல் கடற்படையின் பஸ் வண்டி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஆகியவற்றின் காரண மாக மறு அறிவித்தல்வரை தமது கண்காணிப்புப்பணிகளை இடை நிறுத்துவதாக யுத்தநிறுத்தக் கண் காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

இம் முடிவு திருகோணமலை மாவட்டத் (12 ஆம் பக்கம் பார்க்க)

## போரா... சமாதானமா... தீர்மானிக்கும் இறுதி நகர்வு.

# தலைவர் பிரபா- எரிக்சொல்ஹெய்ம்

# கிளிநொச்சியில் 23 ஆம் திகதி பேச்சு!



### வன்னி வருகிறார் அன்ரன் பாலசிங்கம்

வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து சமாதானம் ஊசலாடிக் கொண்டிருக்கும் மிக இக்கட்டான சூழ்நிலையில் போரா சமாதானமா என்பதைத் தீர்மானிக்கும் இறுதி நகர்வாக தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுக்கும் நோர்வேயின் விசேட தூதுவரும் அமைச்சருமான எரிக்சொல்ஹெய்முக்கும் இடையிலான நேரடிச் சந்திப்பும் இக்கட்டு நிலைமையை களைவது தொடர்பான பேச்சுவார்த்தையும் கிளிநொச்சியில் எதிர்வரும் 23ந் திகதி இடம் பெறவுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இப் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றுவதற்காக லண்டனில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இவ் வார இறுதியில் வன்னி வருவார் என ஆவலோடு எதிர்பார்க்கப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)



## திருமலையில் குண்டு வெடிப்பு 12 கடற்படையினர் படுகாயம்

### துப்பாக்கிச் சூட்டில் இரு பொதுமக்கள் பலி; 4பேர் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை நகருக்கு அருகே சைக்கிள் பார்சல் குண்டு ஒன்று வெடித்ததன் விளைவாக பஸ்ஸில் பயணம் செய்து கொண்டிருந்த 12 கடற்படையினர் பலத்த காயங்க ளுக்குள்ளாகினர். திருகோணமலை நகரில் இருந்து 3கிலோ மீற்றருக்கு அப்பால் கரையோரப்பாதையில் 3ஆம் கட்டைச் சந்தியை அடுத்துள்ள மிருகவைத்திய பணிமனைப் பாதையில் சைக்கிள் பார்சல் குண்டு வெடித்தது.

இதனால் அப்பாதையின் ஊடாகச் சென்ற கடற்படையின் பஸ் பலத்த சேதமடைந்த துடன் அதில் பயணம் செய்த 12 கடற்படையினர் படுகாயங்களுக்கு இலக்காகினர். இவர் களில் 6பேர் மிக ஆபத்தான நிலையில் இருப்பதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இவர்கள் திருகோணமலையில் உள்ள கடற்படை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இக் குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## கைதடியில் இரு குடும்பஸ்தர்கள் நேற்று சடலங்களாக மீட்பு

(சாவகச்சேரி)

கைதடி கோயிலாக்கண்டி வீதியில் துப்பாக் கியால் சுடப்பட்டு இறந்த நிலையில் இரு குடும்பஸ்தர்களின் சடலங்கள் நேற்று மீட் கப்பட்டன.

நாவற்குழி சந்தியில் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றை நடத்தும் உரிமையாள ரான சிதம்பரி கணேசரத்தினம் (வயது 47) மற்றும் அதே கடையில் பணியாற்றும் விஸ் வர்கிருஷ்ணன் (வயது 50) ஆகிய இருவருமே சடலமாக மீட்கப்பட்டவராவர்.

பிரஸ்தாப நபர் இருவரும் நேற்று முன் தினமிரவு 7மணியளவில் சிகை அலங்கரிப்பு நிலையத்தை பூட்டிவிட்டு வீட்டுக்குச் செல்வ தற்காக வெளியேறிய நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற சாவகச் சேரி மாவட்ட நீதிபதி சடலங்களைப் பார்வையிட் டதுடன் அதனை பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக் குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(இ-4,132,133)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.



எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஐக்கிய தேசியக்கட்சியின் நிறைவேற்று தவிசாளராக கருஜெயசூரிய நியமனம்

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய கட்சியின் நிறைவேற்று தவிசாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நடவடிக்கைகளை அமுல் படுத்துதல் மற்றும் ஏற்பாடுகள் ஆகிய பணிகளினைக் கருஜெயசூரிய மேற்கொள்வார்.

கட்சியின் புத்திஜீவிகளின் சபையாக விளங்கும் அரசியல் சபை உறுப்பினர்களை நியமிக்கும் விடயத்தில் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், பிரதித்தலைவர் கருஜெயசூரியவும் இணக்கங்களை ஏற்படுத்திக்கொள்வார்கள்.

இதனைத்தவிர கட்சியின் பாராளுமன்றக் குழுவின் செயற்பாடுகள் குறித்து தீர்மானங்களை எடுப்பதற்கு 5 பேரைக் கொண்ட குழுவொன்றும் நியமிக்கப்படவுள்ளது.

பாராளுமன்றத்தில் கட்சியின் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தும் முகமாக இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. நிறைவேற்றுசபை, மற்றும் மாவட்டசபைகளுக்கு உரிய நியமணங்களை மேற் கொள்வது குறித்தும் தேசிய நிறைவேற்று சபையைத் தீர்மானிக்கும் சக்தியாக மாற்றுவது குறித்தும் இக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை சமாதானம் தொடர்பில் அரசாங்கத்தின் சர்வ கட்சி மாநாடு எதுவித திட்டமும் இல்லாமல் கூட்டப்படுவதாக இச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சுமத்தினர்.

சர்வகட்சி மாநாட்டினை அரசாங்கத்தில் உள்ள கட்சிகள் தமது அரசியல் இலாபம் கருதிக் கூட்டுவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டது.

அத்துடன் அரசாங்கம் மேற்கொள்ளும் உண்மையான சமாதான முயற்சிகளுக்கு தமது கட்சி ஆதரவளிக்கும் என தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட இக் கூட்டத்தில், சமாதான முனைப்புத் தொடர்பாக அரசாங்கம் தமது கட்சிகளிடையே பொது இணக்கப்பாடொன்றினை ஏற்படுத்த வேண்டுமெனவும் கோரப்பட்டது. (த-4)

## சத்துணவு வழங்கல்

(தென்மராட்சி)

கியூடெக்-கரித்தாஸ் நிறுவனம் கடந்த வருடத்தில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் மூவாயிரத்து 816முன்பள்ளி சிறுவர்களுக்கு சத்துணவை வழங்கியுள்ளது என இயக்குநர் அருட் திரு கி.யோ.ஜெயக்குமார் அடிகள் தெரிவித்தார்.

இந்த நிறுவனம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 53 முன்பள்ளிகளையும் வன்னிப் பிரதேசத்தில் 27முன் பள்ளிகளுமாக மொத்தம் 80முன் பள்ளிகளை நடாத்திவருவது குறிப்பிடத்தக்கதாகும். (க-16)

# மோதல்களை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள்

## கொபி அனான் இருதரப்பினரிடமும் கோரிக்கை

(கொழும்பு)

மோதல்களை நிறுத்திவிட்டு உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் நாயகம் கொபி அனான் இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் கேட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் இஸ்ரபான் டொறிக் இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை கண்டிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

அண்மைக்காலமாக அதிகரித்துவரும் மோதல்களால் யுத்த நிறுத்த உடன்படிக்கை கடுமையாக மீறப்பட்டுள்ளது.

நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும்.நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

மீண்டும் மோதல்களில் ஈடுபடுவதால் இருதரப்பினர் மத்தியில்உள்ள கருத்துவேறுபாடுகளை



தீர்த்துக்கொள்ள முடியாது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-7)

# ஆங்கில வகுப்பு ஆரம்பம்

சாவகச்சேரி லயன்ஸ்கழகத்தின் ஏற்பாட்டில் பாடசாலைகளை விட்டு விலகியுள்ள இளைஞர் யுவதிகளுக்கான இலவச ஆங்கிலமொழிவகுப்பு ஒன்று சாவகச்சேரி டிறிபேக்கல் லூரியில் கடந்த ஞாயிறன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கழகத்தின் முன்னாள் தலைவர் லயன் எஸ்.கே.நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் ஆரம்ப வைபவத்தில் சுமார் 50 இளைஞர் யுவதிகள் பங்கு கொண்டிருந்தனர்.

சாவகச்சேரி லயன்ஸ்கழகத்தின் செயலாளரும் ஆங்கில ஆசிரியருமான லயன் எம்.சண்முக நாதன், லயன் சீமாட்டி திருமதி சண்முக நாதன் ஆகியோர் இந்த வகுப்பினை நடாத்திவருகின்றனர். கழகம்முதல் கட்டமாக நடாத்திய இல வச ஆங்கில வகுப்பில் 60 மாணவர்கள் பங்கு கொண்டு பயனடைந்துள்ளனர் என முன்னாள் தலைவர் லயன். எஸ். கே.நவரத்தினம் தெரிவித்தார். (த-16)

# இராசி பலன்

**18.01.2006**
**(தை 5, புதன்கிழமை)**
**சதுர்த்தி முன்னிரவு 11.42 மணிவரை**
**பூரம் முழுவதும்**
**இராகுகாலம் 12.35-2.05 மணிவரை**
**சுபநேரம் 5.05-6.35 மணிவரை**
**அமிர்தம்**

| | |
|---|---|
| மேடம் | வியாபார சிந்தை, காரிய தாமதம், பணவிரயம், குடும்பக்கவலை. |
| இடபம் | மாதா சுகம், ரோகநிலை, முயற்சி தாமதம், பணக்குறைவு. |
| மிதுனம் | கூட்டுமுயற்சி, பொருள் சேர்க்கை, போசன நன்மை, தனவருவாய். |
| கடகம் | காரிய தாமதம், தனவிரயம், வீண்பகை, குடும்பக்கவலை. |
| சிங்கம் | கற்பனை மிகுதி, பிரயாணம், தொழில் நன்மை, நண்பர்கள் சந்திப்பு. |
| கன்னி | பிரயாணம், எதிர்பாராத நன்மை, வாக்கு மேன்மை, முயற்சி தாமதம். |
| துலாம் | எடுத்த காரியம் கைகூடும், தனவருவாய், உற்சாகம், தொழில் விருத்தி. |
| விருச்சிகம் | அதிகாரம், செய்தொழில் விருத்தி, தெய்வ சிந்தை, காரிய அனுகூலம். |
| தனுசு | மாதர்நட்பு, பிதாசிந்தை, திடீர்நன்மை, முயற்சி கைகூடும். |
| மகரம் | மனச்சோர்வு, காரிய தாமதம், அபகீர்த்தி, வேலைச்சுமை. |
| கும்பம் | காரிய நன்மை, செல்வாக்கு, பொருள் சேர்க்கை, விருந்துபசாரம். |
| மீனம் | ஆரோக்கியநிலை, தொழில் நன்மை, முயற்சி கைகூடும், தனவருவாய். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

# தொடரும் வன்முறைகளால் மாணவர்களுக்கு பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் நிலவி வரும் அசாதாரண சூழ்நிலையினால் பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டில் தொடரும் குண்டு வெடிப்புகள், சூட்டுச் சம்பவங்கள், இராணுவக் கெடுபிடிகள் போன்ற சம்பவங்களால் அச்சமடைந்துள்ள மாணவர்கள் சிலர் பாடசாலைக்குச் செல்ல பின்னடிக்கின்றனர்.

அது மட்டுமன்றி, கல்வியில் அவர்கள் காட்டும் ஆர்வமும் குறைவடைந்தே செல்கின்றது. குடாநாட்டில் தொடரும் வன்முறைச் சம்பவங்களால் ஊரீதியாகப் பாதிப்படைந்துள்ள மாணவர்கள் தமது எதிர்காலம் கேள்விக்குறியாகி விடுமோ என அச்சமடைகின்றனர்.

ஏற்கனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அதில் இருந்து படிப்படியாக மீண்டு கொண்டிருக்கும் சூழ்நிலையில் இத்தகைய வன்செயல்கள் மாணவர்களை வெகுவாக பாதித்துள்ளதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. (க)

# ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை

தேசியப் பாடசாலைகளுக்கு நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை அண்மையில் வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் நடைபெற்றது. புதிய நியமனம் பெற்ற 48 ஆசிரியர்கள் இப் பயிற்சிப் பாசறையில் கலந்து கொண்டனர். (து-134)

# கல்வி உபகரணம் அன்பளிப்பு

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் அதன் அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களின் பிள்ளைகளின் கல்வி அபிவிருத்திக்கென கல்வி உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சங்கத்தின் தலைவர் மா.கிருஸ்ணன் இந்தக் கல்வி உபகரணங்களை 300க்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வழங்கிவைத்தார். இந் நிகழ்வில் சங்கத்தின் பொது முகாமையாளர் வே.கிருஸ்ணன் மற்றும் சங்க இயக்குநர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் சாவகச்சேரி பிரதேசத்தில் பனை தென்னை வள வல்லுனர்களின் பனை தொழில் மேம்பாட்டு விடயத்தில் கவனம் செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (த-16)

# மன்னாரில் கைக்குண்டுவீச்சு இராணுவ வீரர் உட்பட இருவர் பலி

மன்னார் நகரில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற கைக்குண்டு வீச்சுத் தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

மன்னார் வைத்தியசாலைச் சந்தையில் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்காகக் கொண்டு இந்தக் கைக்குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் அத்துவ ஜெயவர்த்தன தெரிவித்தார். நேற்றுமுன்தினம் இரவு 9.00 மணியளவில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. காயமடைந்தவர் மன்னார் வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருவதாக இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார். (த-7)

# எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அடுத்த வாரம் இந்தியா பயணம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தவாரம் இந்தியாவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்திய அரசாங்கத்தால் விடுக்கப்பட்ட உத்தியோகபூர்வ அழைப்பை ஏற்று அவர் இந்த விஜயத்தை மேற்கொள்ளவிருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின்போது இந்திய ஜனாதிபதி, பிரதமர் ஆளும் கட்சித்தலைவி உட்பட சிரேஷ்ட அரசியல் தலைவர்களை எதிர்க் கட்சித்தலைவர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்தும் சமாதான நடவடிக்கை குறித்தும் இந்த விஜயத்தின் போது கவனம் செலுத்தப்படும் என்றும் திஸ்ஸ அத்த நாயக்கா மேலும் தெரிவித்துள்ளார். (த-39)

# இலவச பாடநூல்கள் வந்து சேரவில்லை

அரசாங்கத்தினால் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பாடநூல்கள் இன்னமும் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு வந்து சேரவில்லை எனத் தெரியவருகின்றது.

இதனால் பாடசாலை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பெரும் பின்னடைவை எதிர் நோக்கியுள்ளது. மாணவர்களுக்கான இலவச பாடநூல்கள் மற்றும் சீருடைத் துணிகள் வழங்கப்படாமல் இருப்பது குறித்து பெற்றோர்களும் பாதுகாவல்களும் கவலை கொண்டுள்ளனர்.

இதேசமயம், மாணவர்களுக்கான பார்டநூல்கள் இல்லாமையினால் அவர்களுக்கான கற்பித்தல் நடவடிக்கைகளும் தாம் தாமதமடைந்து வருவதாக ஆசிரியர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.(த-16)

# ஷெல் காஸுக்கு தட்டுப்பாடு;
# அடுத்த மாதம் முதல் ஏற்படுமாம்

(கொழும்பு)

ஷெல் காஸ்நிறுவனம் புதிய இறக் கும திகளை நிறுத்தியுள்ளதால் அடுத்த மாதம் முதல் ஷெல் காஸுக்கு தட்டுப்பாடு ஏற் படும் அபாயம் உள்ளது. ஷெல்காஸ் நிறு வனம் காஸ்சின் விலையை அதிகரிக்குமாறு அரசாங்கத்தை கே[illegible]ருந்தபோதும் அரசு இது வரை எவ்வித[illegible]டிவடிக்கையும் அறிவிக்க வில்லை.

இதனைக் கருத்தில் கொண்டு இந்நிறு வனம் வெளிநாட்டில் இருந்து காஸ் இறக் குமதி செய்வதை நிறுத்தியுள்ளது.

இதே வேளை இந்நிறுவனத்தின் தலை வரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ஹசின்மாடனி கருத்துக்கூறுகையில் அடுத்த மாதம் முதல் 20 அமெரிக்கடொலரால் ஒரு மெற்றிக்தொன் எல். பி. ஜி. காஸின் விலை அதிகரிக்கும்.

ஆகவே 602 அமெரிக்க டொலருக்கு ஒரு மெற்றிக்தொன்னை கொள்வனவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அடுத்த மாதத்துக்குரிய காஸ் வரு மானத்தை விட செலவு அதிகமாகவுள்ள தால் கொள்வனவு செய்யவில்லை. அர சும் காஸ்விலை அதிகரிப்பைஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

இந்நிறுவனத்தின் வருமானம் தொடர் பாக முழு கணக்கறிக்கையும் நுகர்வோர் அதிகார சபையிடம் கையளிக்கப்பட்டது. எனி னும் இம்முறை வழமைக்கு மாறாக விலை அதிகரிப்பை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர்.

காஸின் விலையைக் குறைப்பதற்கு ஷெல் காஸ் நிறுவனத்தை மறு சீரமைக்க வேண்டும் என நுகர்வோர் அதிகார சபை தெரிவித் துள் ளது என்றார்.

(க)

# இராணுவ மோட்டார் சைக்கிள் மோதி வயோதிபர் காயம்!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் வந்த இராணு வத்தினர் சைக்கிளில் சென்ற வயோதிபரை மோதிவிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வல்வெட் டித்துறையில் இடம்பெற்றது.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த நடராஜா (வயது 70) என்பவரே காயம டைந் தவராவார். காயமடைந்த இவர் யாழ். போதான வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

(க-39)

# விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுக்கு அழைக்க தீவிர முயற்சி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளை மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள் ளச் செய்வதற்காக தேசிய குழுவொன்று நிய மிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு அமைச்சரவை செயலா ளர்கள் சங்கத்துடன் இணைந்ததாக அமைந் துள்ளது.

இந்தக்குழுவின் அங்குரார்ப்பண வைப வம் கூட்டுறவு மொத்த விற்பனைச் செயல கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சங்கத்தின் செயலாளர் அஜித ஜெய சுந்தர இது பற்றித் தெரிவிக்கையில்,

மக்களிடையே சமாதானத்தை மீண் டும் ஏற்படுத்தும் நோக்கத்துடனே இந்தக் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

மாவட்ட மட்டத்தில் சமாதான ஊர்வலங் களை நடத்துவதற்கும் இந்தக் குழு திட்ட மிட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரி வித் தார்.

(க-7)

# மரங்களை தறிக்குமாறு படையினர் வற்புறுத்தல்

(யாழ்ப்பாணம்)

மல்லாகத்தில் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்து இப்பகுதிகளில் வீதி ஓரமாகவுள்ள மரங்களை தறிக்குமாறு படையினர் பொதுமக்களை வற்புறுத்தி வருகின்றனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பற்றைக்காணிகளையும் துப்புரவு செய்யுமாறு படையினர் மக்களை வற்புறுத்தி வருகின்றராம்.

படையினரின் வற்புறுத்தலுக்கு அஞ்சி அங்குள்ள பற்றைக்காணிகளை துப்புரவு செய்யும் பொதுமக்கள் வீதிகளில் உள்ள நிழல்தரும் மரங்களையும் தறித்து வரு கின்றனராம் இவ்வாறு தாவரங்கள் அழிக் கப்படுவதால் சூழலுக்கு பெரும்பாதிப்பு ஏற்படும் எனச் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கிறார்கள்.


(க)



மாநகர சபையின் முன்னாள் ஆணையாளர் கலாநிதி க.குணராசாவின் பிரியாவிடை வைபவத்தின் போது மாநகர சபையின் பொதுசன தொடர்பு அதிகாரி இ. இரத்தினசிங்கம் மலர்மாலை அணிவிப்பதையும் தற்போதைய மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் விழாநாயகனுக்கு பொன் னாடை போர்ப்பதற்கு தயாராவதையும் படத்தில் காணலாம்.

# கேணல் கிட்டுவின் நினைவு நிகழ்வு











கேணல் கிட்டு உட்பட 10 வேங்கை களின் நினைவு நிகழ்வு கடந்த ஞாயிற் றுக்கிழமை அன்று தளபதி கேணல் கிட்டு அவர்கள் இறுதியாக இருந்து செயற்பட்ட சுவிற்சிலாந்தில் நினைவுக்கூரப்பட்டது.

சுவிற்சிலாந்தின் பேர்ண் மாநிலத்தில் நினைவுகூரப்பட்ட எழுச்சி நிகழ்வில் பல நூற் றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு தமிழீழத்தின் மூத்த தளபதிக்கும் போராளி களுக்கும் மலர் தூவி அஞ்சலி செலுத் தினார்கள். இந்நிகழ்வில் சுவிஸ் கலை பண்பாட்டுக்கழக இசைக்குழுவினரின் இசையில் தளபதி கேணல் கிட்டுவினதும் போராளிகளினதும் நினைவு சுமந்த கானங்கள் வயலின் இசையாகவும் பாடல்களாகவும் இசைக்கப்பட்டன.

சுவிஸ் பண்பாட்டுக்கழக வில்லிசை கலைஞர்களின் தளபதி கேணல் கிட்டு வின் நினைவு சுமந்த வில்லிசையும் சுவிஸ்லாந்தின் நாட்டியாலய மாண விகளின் எழுச்சி நடனங்களும் மேற்கத் தேய நடனங்களும் இடம்பெற்றன. தமி ழத்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா. அரிய நேந்திரன் கலந்துகொண்டு சிறப்புரையும் ஆற்றினார். கடந்த 7,8ஆம்திகதிகளில் சுவிஸ் வின்ரத்தூரில் விளையாட்டுத் துறையினாரால் நடத்தப்பட்ட கேணல் கிட்டு ஞாபகார்த்த உள்ளரங்க உதை பந் தாட்டப் போட்டியில் வெற்றியீட்டி யோருக் கான சில நினைவுப் பரிசில்களும் வழங்கப்பட்டன.







இதேவேளை வங்கக்கடலில் வீரகாவிய மான கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங் கைகளின் 13ஆவது ஆண்டு நினைவு நிகழ்வும் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் அவர்களின் நினைவும் பாரிஸ்நகரின் புற நகர் பகுதியான எல்.எஸ்.சி. மண்டபத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணிக்கு சிறப்பாக நினைவு கூரப்பட்டன.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மாவீரர் 2ஆம் லெப் . ஞானச்சுடரின் சகோதரியும் தமிழீழ தேசியக் கொடியினை பிரெஞ்சுக் கிளை பரப்புரை பொறுப்பாளர் மேத்தாவும் ஈகச்சுடரினை மாவீரர் லெப்.குட்டிமணி யின் சகோதரரும் ஏற்றிவைத்தனர். அமைதி வணக்கத்துடன் பாரிஸ் ஈழ நிலா இசைக் குழுவினர் எழுச்சிப் பாடல்களை வழங்கினர். தமிழ்ச்சோலை மாணவ மணிகள் உரை யாற்றினர். எழுச்சி நடனங்களை பொண்டி, லாக்கூர்னோ, சென் டெனிஸ் தமிழ்ச் சோலை மாணவ மாணவிகள் வழங்கினர். அதனைத் தொடர்ந்து கலை பண்பாட்டுக் கழக கலைஞர்கள் ஒன்றிணைந்து சிங் கள கிராமத்தில் சிவலிங்கம் என்ற நாடகத் தையும் வழங்கினார். இவ் எழுச்சி மாலை நிகழ்வில் 700 வரையிலான தமிழ் மக்கள் கலந்து கொண்டு நினைவு கூர்ந்தன. தமிழ்த் தேசியக்கொடி இறக்கலுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

(து)

# நியமனம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வைத்திய பட்டதாரிகள் 800 பேருக்கு உடனடியாக நியமனம் வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி 1998ஆம் 1999ஆம் கல்வியாண்டில் தேசிய வைத்திய பீடங்கள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக் கழகங் களில் வைத்திய பட்டம் பெற்று வெளியேறி யவர்கள் இந்த நியமனத்திற்கு தெரிவு செய் யப்படவுள்ளனர்.

நியமனக்கடிதங்களை பெற்றுக்கொள் ளும்போது இலங்கை வைத்திய சபையி னால் வழங்கப்பட்டுள்ள தற்காலிக பதிவு ஆவணப்பிரதியைச்சமர்ப்பிக்கவேண்டும்என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் வைத்திய பட்டம் பெற்று நாடு திரும்பியுள்ளவர்கள் அவர்களின் பட் டப்படிப்பை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை வைத்திய சபையினால் வழங்கப் படும் கடிதத்தின் பிரதியையும் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(த-7)

## இன்று ஒரு தகவல்

# சாப்பிட மறுக்கும் குழந்தைகள்

அம்மாக்களுக்கு அடிக்கடி ஏற்படும் கவலை ஒன்று உண்டு. அதாவது பிள்ளை சரியாக சாப்பிடமாட்டேன் என்கிறதே என்ற கவலை! இவர்கள் ஒரு விடயத்தை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். பிள்ளைகள் பெரியவர்கள் மாதிரி இல்லை அவர்கள் கடிகாரத்தில் மணிபார்த்துவிட்டு சாப்பிட உட்காரும் ரகம் இல்லை. பசித்தால் சாப்பிடுவார்கள் இல்லாவிட்டால் விளையாடுவார்கள் அல்லது உறங்குவா ர்கள் அது புரியாமல் அவர்களைக் கட்டாயப் படுத்தி அல்லது மிரட்டிச் சாப்பிடவைப்பது மிகவும் தவறு.

எட்டு மாதக் குழந்தைக்கு மூன்று மணித்தியாலயத்திற்கு ஒரு முறைப்பசிக்கும். அந்த நேரம் பார்த்துச் சாப்பாடு கொடுத்தால் அடம் பிடிக்காமல் சாப்பிட்டுவிடும் அதே குழந்தைக்கு ஒருவயது ஆகும் போது நான்கு மணி நேரத்திற்கு ஒரு முறை பசிக்கும். இந்த வயதில் இயற்கையாகவே பசி குறைந்திருக்கும் அது புரியாமல் என் பிள்ளை முன்பு மாதிரி சரியாக சாப்பிட மாட்டேன் என்கிறான் என்று சிலபேர் டாக்டரிடம் போய்ச் சொல்லிக்கொண் டிருப்பார்கள்.

இன்னொரு விடயம் ஒரு குழந்தைக்கு வயது அதிகமாகும் வேகத்திற்குஉடல் எடையும் அதிகரித்துக்கொண்டு செல்லாது. உடல் எடை அதிகரிக்கும் வேகம் குறைந்து கொண்டே வரும் ஆறுமாதக் குழந்தைக்கு ஒரு வாரத்தில் 150 கிராம் எடைகூடும். ஒரு வயதில் வாரத்திற்கு 71 கிராம் எடைகூடும். இது புரியாமல் அதிகமாக சாப்பாட்டைக் கொடுத்துபிள்ளையைக் கஷ்டப்படுத்தக் கூடாது ஏனென்றால் அளவுக்கு மீறிய உணவு அஜீரணத்தை உண்டாக்கிவிடும்.

குழந்தைக்கு ஒரு தட்டில் கொஞ்சமாக ஆகாரத்தை வைத்து கொடுக்கவேண்டும். மலை மாதிரி குவித்து வைத்துக் கொடுத்தால்அதைப்பார்த்ததுமே பசி அடங்கிப் போய்விடும். அடித்து மிரட்டி பயமுறுத்திக் குழந்தையைச் சாப்பிடவைக்கும் பழக்கம் இருக்கிறது பாருங்கள் .அதற்கு food forcing என்று பெயர் இப்படிச் செய்தால் குழந்தைக்குச் சாப்பாட்டில் விருப்பம் குறைந்து அதைக் கண்டாலே வெறுக்க ஆரம்பித்துவிடும். உளம் சார்ந்த பசிக்குறைவு psychogenic Anorexia ஏற்பட்டுவிடும் சாப்பாடு என்பதே ஒரு தண்டனை மாதிரி தோன்றும்.

குழந்தைகளுக்குப் பிடித்தமாதிரியான உணவைக் கொடுக்க வேண்டும் சத்து அதிகம் இருக்கிறது என்பதற்காக அதற்குப் பிடிக்காத ஆகாரத்தைக் கொடுத்து கட்டாயப் படுத்தக் கூடாது.

பிள்ளைகளுக்கு இரண்டு வயதாகும் போது இயற்கையாகவே எதிர்மறைக்குணம் உண்டாகும்(Negativistic Behaviour) இது போன்ற சமயங்களில் நாம் என்ன சொல்கிறோமோ அதற்கு நேர்மாறாக நடந்து கொள்ளும் ஏட்டிக்குப் போட்டி! சாப்பிடச் சொன்னால் விளையாடப் போகும் விளையாடச் சொன்னால் சாப்பாடு கேட்கும் இதைப் புரிந்துகொண்டுநடந்து கொள்ளவேண்டும் பிள்ளை சொன்ன பேச்சைக் கேட்கவில்லையே என்று கோபப் படக்கூடாது.

குழந்தை வளரவ்ளர பிடிவாத குணம்வருவது சகஜம் கேட்டதை வாங்கிக் கொடுத்தால்தான சாப்பிடுவேன் என்று பிடிவாதம் பிடிக்கும் வாங்கிக் கொடுப்பதுதான் உத்தமம் நீங்களும் அதனிடம் பிடிவாதம் பிடித்துக் கொண்டிருக் கக்கூடாது ஏனென்றால் கேட்டது கிடைக்கவில்லையே என்ற ஏமாற்றம் கூட குழந்தையின் பசியைக் குறைத்துவிடும் கேட்டது கிடைத்துவிட்டால் பசி அதிகமாகும். குழந்தை மளமளவென்றுசாப்பிட்டு விடும்.

குழந்தைகளுக்கு கண்டகண்ட நேரத்தில் சாப்பிட எதையாவது வாங்கிக் கொடுத்துககொண்டிருந்தால் சாப்பாட்டு நேரத்தில் சாப்பிடாமல் அடம் பிடிக்கும். பள்ளிக்கூடம் போகும் பிள்ளைகள் காலை உணவைச் சரியாகச் சாப்பிடமாட்டார்கள் அச்சம் அவசரம் பரபரப்பு இதெல்லாம் தான் காரணம் பள்ளிக்குப் புறப்படுவதற்கு முக்கால் மணி நேரத்திற்கு முன்னால் சாப்பாடு போடுங்கள் சரியாகிவிடும்.

படிக்கும் பிள்ளைகள உடல்சோர்வு உளச் சோர்வு போன்றவற்றின் காரணமாகவும் சாப்பிடமறுப்பது உண்டு. இப்போது உதாரணமாக மாலையில் விளையாடிவிட்டு வீட்டுக்கு வந்ததும் சாப்பிடச் சொன்னால் வேண்டாம் என்பார்கள் இது உடல் சோர்வு.

நீண்டநேரம் வீட்டுப் பாடங்களைச் செய்து முடித்த கையோடு சாப்பிடச் சொன்னாலும் அவர்களால் சரியாகச் சாப்பிட முடியாது இது உளச்சோர்வு இவை தவிர குழந்தைகளுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டாலும் சாப்பிடமறுப்பது உண்டு. சில மருந்துமாத்திரைகளும் பசியைக்குறைத்து விடும் .அதனால்சரியாக தெரிந்து கொண்டு பிள்ளைகளைச் சாப்பிடவைக்க வேண்டும். அது புரியாமல் கையில் சாப்பாட்டுத்தட்டை வைத்து விரட்டித்திரியக் கூடாது.

ஒரு சிறுவன் சொன்னான் எங்கள் அம்மா சாப்பாடு போடுவது தெரிந்தால் நான் உடனே வீட்டைவிட்டுவெளியே ஓடிப் போய்விடுவேன் என்றான். ஏன் அப்படி? என்று கேட்டேன் எங்கள் அப்பா கூட அப்படித்தான் சார் செய்வார் என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## முன்னாள் ஜனாதிபதி பெப்ரவரி - 20இல் நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென உத்தரவு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் சமர்ப்பித்திருந்த மனுவை பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட பின்னரே மேன் முறையீட்டு நீதிமன்றம் இவ்வுத் தரவைப் பிறப்பித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிக்கு மதிவெலப்பிரதேசத்தில் ஒன்றரை ஏக்கர் காணி வழங்கப்பட்டுள்ளமை சட்டத்தித்திக்கு முரணானது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னால் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் ஆகியோர் பிரதிவாதிகளாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான கே.ஸ்ரீபவன் மற்றும் சிசிர ஸ்ரீ ஆர்புறு ஆகியோர் முன்னிலையில் இம்மனு பரிசீலணைக்கு எடுக்கப் பட்டது. (க-39)

## துப்பாக்கிச் சூட்டில் இருவர் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரை அண்மித்த ஸ்ரீமா புரம் பகுதியில் இராணுவத்தினரின் காவல் அரணை அண்மித்த பகுதியில் வைத்து கடந்த ஞாயிற்றுக் கிழமை பின்னிரவு வேளை, இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற செல்வநாயகம் நிர்மலராஜ் (வயது 35) சபாராட் ணம் மதிவதனகுமார்( வயது 31) ஆகியோர் காயமடைந்து திருகோணமலை வைத்தியசாலையில் விசேட கிசிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக திருகோணமலை பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (து-4)

## பதவி உயர்வுடன் நியமனம்

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய சோ.குமாரவேலு பதவி உயர்வுடன் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக நியமனம் பெற்றுள்ளார். (து-134)

# கேணல் கிட்டுவின் 13ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி கண்காட்சி
















(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் 13வது ஆண்டு நினைவு நாளையொட்டி பனை வேலை உற்பத்திப் பொருள் கண்காட்சி கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கிளிநொச்சி இரணைமடுச்சந்தியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தக் கண்காட்சி முற்பகல் 11.30 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வின் ஆரம்பத்தில் முதன்மைச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி ஆனந்தராஜா ஏற்றி வைக்க தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஏற்றிவைத்தார்.

இதேவேளை, அரசியல்துறை நடுவப்பணியகத்தில் இடம்பெற்ற மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகளின் வணக்க நிகழ்வில் முதன்மைச்சுடரினை தமிழீழவிடுதலைப் புலிகளின் ஊடகப் பிரிவு பொறுப்பாளர் க. நரேஷ் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் மு.பாவரசன் ஏற்றி வைத்தார்.

கேணல் கிட்டுவின் உருவப்படத்திற்கு சுடர் ஏற்றி

மலர்மாலை அணிவிக்கப்பட்டது. பனை வேலை உற்பத்தி பொருள் மண்டபத்தினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர்சோ. தங்கன் நாடாவெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

இவை தவிர மூத்ததளபதி கிட்டு வரைந்த ஓவியங்களின் காட்சி கிளிநொச்சி நுண்கலை கல்லூரியில் நேற்று இடம்பெற்றது .முற்பகல் 9.00 மணிக்கு இந்தக் கண்காட்சி ஆரம்பமாகி இன்றும் இந்தக்கண்காட்சி இடம்பெறும். (க-4)

## புலமைப்பரிசில் பெற்றுக் கொடுப்பதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன

அரச ஊழியர்கள் ஆசிரியர்களின் பிள்ளைகளில் மூன்று பேர் ஆண்டு 5 ற்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் மூன்றாவது பிள்ளைக்கு புலமைப்பரிசில் பெறுவதற்கு பெற்றோர் விண்ணப்பிக்க முடியுமென்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் கூ[illegible] வருமானம் பெறுபவர்களின் பிள்ளை[illegible]ளுக்கு புலமைப்பரிசில் பெற்றுக்கொடுப்பதற்கான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளன.

இரு பிள்ளைகளுக்கு மேல் மூன்றாவது பிள்ளைக்கு 5ஆம் தரப் புலமைப் பரிசில் சித்தியடைந்தால் மூன்றாவது பிள்ளைக்கும் புலமைப்பரிசில் பெறுவதற்கு தகுதி பெறுகின்றார் என யாழ்.கல்வி வலயக் கணக்காளர் கே.ஆர்.துரைசிங்கம் தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளையின் பெற்றோர் புலமைப்பரிசில் வழங்குமாறு கோரும் விண்ணப்பக் கடிதத்துடன் பரீட்சையில் சித்தியடைந்த எல்லாப் பிள்ளைகளினதும் பரீட்சை பெறுபேற்றுப் பட்டியலுடன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள், பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்கள் என்பனவற்றை இணைத்து வலயக் கல்விப்பணிமனையில் ஒப்படைக்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பங்கள் வடக்கு- கிழக்கு மாகாணக் கல்வியமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டு புலமைப்பரிசில் நிதியைப் பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-2)

## கொழும்பு - மாத்தளை இடையேயான இருவழி ரயில்வேத் திட்டம்

(கொழும்பு)

கொழும்பு - மாத்தளை இருவழி ரயில்வேத் திட்ட அமைப்பு வேலைகள் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கென இந்திய அரசாங்கம் 15 பில்லியன் ரூபாய் நிதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டபோது இந்தத் திட்டம் தொடர்பான இறுதித்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு இலங்கைப் பொறியியலாளர்கள் மற்றும் ரயில்வேத் திணைக்கள ஊழியர்களின் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளன.

இத்திட்டம் பூர்த்தியடையும் பட்சத்தில் அதிவேக ரயில் ஒன்று மாத்தளையிலிருந்து கொழும்புக்கு வருவதற்கு சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் போதுமானது என்று ரயில்வேத் திணைக்கள அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (த-7)

## விசாரணைக்கு உதவக் கோரிக்கை

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் யாழ்.குடாநாட்டில் அதிகரித்துவரும் வன்முறைகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு தமது விசாரணைகளுக்கு உதவுமாறு சட்டமா அதிபரை கேட்டுள்ளது.

கொலைகள் உட்பட பல குற்றச்செயல்கள் விசாரணை செய்யப்பட்வுள்ளன. இந்த விசாரணைகளை மேற்கொள்வதற்கு உதவியாக அரச சட்டத்தரணியை நியமிக்குமாறும் இக்குழு சட்டமா அதிபருக்கு தெரிவித்துள்ளது.

அரச சட்டத்தரணி மற்றும் அலுவலர் நியமிக்கப்பட்டதும் இதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி டி.ஜெயவிக்கிரம இந்தக் குழுவிற்கு தலைமை தாங்குகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

## கல்வித்துறையில் பெருமளவு பட்டதாரிகள் இணைக்கப்படுவர்

ஜனவரி மாத முடிவிற்குள் கல்வித்துறையில் பெருமளவிலான பட்டதாரிகளை இனைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது மஹிந்த சிந்தனை மூலம் கல்வித்துறைக்கு அதிக கவனம் செலுத்தியுள்ளார்.

இதன்படி எதிர்வரும் ஐந்து வருட காலத்திற்குள் கல்வித்துறையில் பாரிய வளர்ச்சியினை ஏற்படுத்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பட்டுள்ளார்.

நல்லொழுக்கமுள்ள சமுதாயமொன்றினைக் கட்டியெழுப்ப கல்வித்துறையின் பங்கு முக்கியமானதெனவும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கல்வி அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் கல்வித்துறை உட்பட அரசதுறைகளில் பெருமளவிலான பட்டதாரிகள் நியமிக்கப்பட்டனர்.

இந் நடவடிக்கை எதிர்காலத்திலும் இடம்பெறும் எனவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (சு-2)

## கர்ப்பிணித் தாய்மாருக்கு விசேட சத்துணவுப் பொதி

(கொழும்பு)

சமுர்த்தி உதவிபெறும் குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பிணித் தாய்மார் அனைவருக்கும் மாதாந்தம் 500 ரூபா பெறுமதியான விசேட சத்துணவு பொதிகளை வழங்க சமுர்த்தி வறுமை ஒழிப்பு அமைச்சு திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் தொடக்கம் இத்திட்டம் அமுல் செய்யப்படும்.

பிரசவத்துக்கு முன்னரான 6 மாதங்களுக்கும் பிரசவத்தின் பின்னர் ஒரு வருடத்துக்குமாக 18 மாதங்களுக்கு இச் சத்துணவு கர்ப்பிணித்தாய் ஒருவருக்கு வழங்கப்படும். சுகாதார அமைச்சின் ஆலோசனையுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத் திட்டத்துக்கு 54 இலட்சம் ரூபா செலவிடப்படவுள்ளது.

4 மாவட்டங்களைச் சேர்ந்த 8 பிரதேச செயலாளர் பிரிவுகளில் முதலில் பரீட்சார்த்தமாக இத்திட்டம் அமுல் செய்யப்படவிருக்கிறது. (க)

## அனலைதீவில் புதிய இறங்குதுறை

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு, புனரமைப்பு, நல்லிணக்க அமைச்சின் கீழ் 58 இலட்சம் ரூபா செலவில் அனலைதீவில் புதிய இறங்குதுறை அமைக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் கே.சிறிமோகன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஊர்காவற்றுறைப் பிரதேசத்திற்குட்பட்ட தம்பாட்டி வீதி நிக்கொட் உதவித்திட்டத்தின் கீழ் ஒரு கிலோ மீற்றர் தூரம்வரை புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (க)

## கேணல் கிட்டு உட்பட 9 வேங்கைகளின் நினைவு வணக்க நிகழ்வு கனடாவில்

வங்கக் கடலிலே 1993 ஆம் ஆண்டு இந்தியச் சதியினால் காவியமான கேணல் கிட்டு மற்றும் ஒன்பது வேங்கைகளின் 13 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு கனடா நாட்டின் ரொறன்ரோ நகரில் உணர்வு பூர்வமாக நடைபெற்றுள்ளது.

ஆர்மேனியன் இளையோர் நிலையத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு இந்நிகழ்வு நடைபெற்றது.

கனடிய மற்றும் தமிழீழத் தேசியக் கொடிகள் ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மாவீரர்களின் திருவுருவப் படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் வணக்கம், அகவணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன.

உணர்வுபூர்வமாக நடைபெற்ற இந் நிகழ்வில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். (க)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

பிரதி நட்ட ஈட்டு ஆணையாளர் பதவிக்கான விண்ணப்பங்களை நீதிச் சேவை ஆணைக்குழு கோரியுள்ளது.

தொழில் நியாய சபைத் தலைவர் ஒருவராக இரண்டு வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தினைக் கொண்டுள்ள சட்டத்தரணி மூன்று வருடங்களுக்குக் குறையாததொரு காலப்பகுதிக்கு முனைப்பாகத் தொழிலில் ஈடுபட்டிருந்த அல்லது ஈடுபட்டிருக்கும் சட்டத் தரணி,

அமைச்சு ஒன்றில், அரச திணைக்களமொன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் நான்கு வருடங்களிற்குக் குறையாத காலப்பகுதிக்கு சட்டம் பற்றிய விடயம் தொடர்பாகக் கடமைபுரிந்துள்ள சட்டத்தரணி,

சட்டத்தரணிகள் சமாசமொன்றில் அல்லது வங்கியொன்றில் அல்லது அங் கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனமொன்றில் சட்டம் தொடர்பான முறையில் நான்கு வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தினைக் கொண்டுள்ள அக்காலப் பகுதியினுள் தொடர்ந்து [illegible]திமன்றங்களில் தோற்றியுள்ள ஒரு சட்டத்தரணி ஆகியோர் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

தொழிலாளர் நட்ட ஈட்டுச் சட்டம் பற்றிய அறிவு அவை அமுல்படுத்தப்படல் பற்றிய அனுபவம் என்பன மேலதிக தகைமைகளாகக் கொள்ளப்படும்.

இப்பதவிக்குரிய தகமைகளைக் கொண்டிருப்போர் தமது விண்ணப்பங்களை அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கலாம். (சு-7)

* * *

(மானிப்பாய்)

மொரட்டுவ தொழில் நுட்ப செயலகத்தினால் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் நடத்தப்படவுள்ள தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2003, 2004, 2005 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஜீ.சி.ஈ உயர்தரப் பரீட்சையில் பௌதீகம், இரசாயனம், இணைந்த கணிதம், உயர் கணிதம் ஆகிய பாடங்களில் ஏதாவது மூன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்த 24 வயதுக்குக் குறைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. விண்ணப்பங்களை இம் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தொழில்நுட்ப நிறுவனம் மொரட்டுவப் பல்கலைக்கழகம் என்னும் முகவரிக்கு அனுப்புமாறும் கேட்கப்பட்டுள்ளது. (க)

## கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சொலிடாரின் நிறுவனமானது, சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னர் தம்மால் மேற்கொள்ளப்பட்ட புனர்நிர்மாணப் பணி களைப் பிரதிபலிக்கும் கண்காட்சி ஒன்றை திட்ட அமுலாக்கல் ஒருங்கிணைப்புச் செயலகம், மருதங்கேணியில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்துவைத்துள்ளது.

இக்கண்காட்சி இன்றும், நாளையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியானது சிறார்களின் கை வண்ணங்களினால் உருவாக்கப்பட்ட படங்கள் உட்பட 200 வரையான புகைப்படங்களை உள்ளடக்கியதாகும்.

இது கடந்த காலங்களில் நோர்வே, பெல்ஜியம், இத்தாலி மற்றும் கொழும்பு போன்ற இடங்களில் நடைபெற்று இறுதியாக இங்கும் கால் பதித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சுனாமிக்குப் பின்னர் எமது வலையமைப்பினூடாக இதுவரையும் மேற்கொள்ளப்பட்ட வன்னிப் பகுதியில் அகற்றப்பட்ட கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் அகற்றும் நடவடிக்கைகள், நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான வீட்டு மாதிரிகள் சமூக வேலைத் திட்டங்கள் போன்ற ஆவணங்களையும் [illegible]வளிப்படுத்துகின்றன. (க)

## ஜே.வி.பியின் தொடர் சொற்பொழிவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் நாடு முகம்கொடுத்துள்ள சவால்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் தொடர் சொற்பொழிவுகளை நாடு முழுவதிலும் நடத்துவதற்கு ஜே.வி.பி தீர்மானித்துள்ளது.

இதன்படி முதலாவது சொற்பொழிவு காலி நகர மண்டபத்தில் நேற்றுமுன்தினமும், இரண்டாவது சொற்பொழிவு நேற்று பிற்பகல் மகரகமவிலும் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இன்று கண்டியில் சொற்பொழிவு நடை பெறவுள்ளது. (க)

## புலமைப் பரிசில் பரீட்சை

**வினாத்தாள் - 1இன் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 01. (2) | 02. (1) | 03. (3) | 04. (1) | 05. (3) |
| 06. (3) | 07. (1) | 08. (2) | 09. (3) | 10. (1) |
| 11. (2) | 12. (1) | 13. (2) | 14. 42 | 15. 6 |
| 16. 1680 | 17. 1470 | 18. 40 | 19. பொருத்தமானது | |
| 20.பொருத்தமானது | | 21. (2) | 22. (3) | 23. (2) |
| 24. (1) | 25. 5 | 26. 36 | 27.49 | |
| 28 - 32 பொருத்தமானது | | 33. 13 | 34. (2) | 35. (3) |
| 36. (1) | 37. (2) | 38. (2) | 39. (2) | 40. (2) |

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?

(தொடர்ச்சி....)

## பன்னிரு இராசிகளுக்கும் செப்ரெம்பர் மாதத்துக்குரிய பலன்கள்

| | | | |
|---|---|---|---|
| ரா | | | |
| | செப்ரெம்பர் ராசி நிலை | | சனி |
| | | | சூ சு பு |
| | சந் | குரு | கே செ |

### மேடம்
(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1)

இந்த மாதம் வக்ரம் நீங்கிய குரு 7இல் கௌரவ இல்லமான 5இல் நான்கு கிரகங்களோடு சூரியன் ஆட்சி. சுதந்திரமாகச் செல்லும் சனி 4இல் தடைப்பட்ட காரியங்கள் எல்லாம் கூடி வந்துவிடும். பெருமை பேச்சுக்கள் அதிகமாக இடம்பெறும். இது இப்போது அவசியம். உங்கள் உள்ளம் மற்றவர்களுக்கு உதவி செய்வதிலும் தவறுவதில்லை. எனவே உங்களுக்கு மற்றவர் ஒத்துழைப்பு உரிய நேரத்தில் கிட்டும். குடும்ப முன்னணி திருப்தியாக இருக்கின்றது. உங்கள் தொழில் கூட்டு மனிதர்களும் எல்லா வகையிலும் இணக்கமாக இருப்பதை உணர்லாம். பொது வாழ்வு ஈடுபாடு கௌரவப் பதவியும் இப்போது உங்களைத் தேடி வர வேண்டிய காலமாகும். கடந்து போன காரியங்கள் சிலவற்றில் எழுத்து மூலியமாக நன்மைகளும் உண்டாக்கவல்லது. கடன் வழக்கு பிரச்சினைகள் மட்டும் தொடர்ந்து இருக்கும். அதன் மூலம் பணமும் செலவும் கூட விலக்க முடியாதவையே. கடன்பட்டும் வாகனம் வாங்குவது பிரயாணம் வாகன சுகமும் சிலருக்கு முக்கிய அம்சமாக இருக்கும். ஒப்பந்தத் தொழில் அயல்நாட்டு வியாபாரம் செய்பவர்களுக்கு ஒருவித பிடிப்பு இருக்கிறது. அரசாங்க வகையில் தன உபகாரம் இருக்கிறது. நண்பர்கள் இல்லத்திற்கு விருந்தினராக செல்வீர்கள். நாகரீக வாகனம் வாங்குவது போன்ற நன்மைகளும் உள்ளன. போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகளில் அவ்வளவு சிறப்புடையதாக இல்லை. சூதாட்டம், லாட்டரி போன்ற வழிகளிலிருந்து செய்யும் காரியம் கவர்ச்சிகரமான போக்கை உதயமாக்கிவிடும். இப்போது கணவன், மனைவி வகைக்கு மருத்துவச் செலவு இடம்பெறுவது தவிர்க்க முடியாது. எழுத்து வகை உத்தரவுக்கு உதவியாக இருக்கும். கணவன், மனைவி குழந்தைகள் மருத்துவச் செலவு உண்டாகும். மாணவ, மாணவியர்களுக்கு கல்வியில் சிறப்புத் தன்மை இருக்கிறது. உங்களுக்கு கிரகங்களின் சாதகமான போக்கு தெளிவடையும். தூரத்து பிரயாணத்தையும் உண்டாக்கும் மாதம். குடும்ப வகையில் சுபச் செலவுகளும் புதிய உறவும் சேர்வதும் குறிப்பாக நன்மைகளாகும். தொழில் மந்தம் என்பது இல்லை. வேலையாட்கள் நல்ல போக்கில் இயக்கம் கொள்வதால் தனநிலை உயர்வைப் பெறுவீர். இப்போது தைரிய உயர்வும் இருக்கும். கடன் சம்பந்தமாக பிரச்சினைகள் முன்பு இருந்தது. இப்போது கட்டுக்கடங்கி வந்துவிட்டன. பெருமைப் பேச்சுக்கள் அதிகமாக இருக்கும். கணவன், மனைவி உறவு திருப்தியானதே. தனித்து இயங்குவதை விட கூட்டு முயற்சி கணிசமான நன்மை தரும் என நம்பலாம். மேலும் அலுவலக சூழ்நிலை சுமூகமாக இருக்கின்றன. புதுமணத் தம்பதிகளுக்கு இனிமையான பிரயாணத்தைக் கூட்டி வைக்கும். பசும்பொன் ஆபரண சேர்க்கை பட்டாடைகளும் சித்தி பெறும். கலைப்பிரிவு ஆண், பெண்களுக்கு கவர்ச்சிமிக்க மாதமிது. புது மனிதர்கள் சந்திப்பு பழைய நண்பர்கள் கூடப் பேசுவது போன்ற நல்ல போக்குகள் இருக்கின்றன. அரசியல் வட்டாரத்தினர் மூலம் குறிப்பாக சிலர் உத்தரவைப் பெறுவீர்கள்.

### ரிஷபம்
(2,3,4 கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2)

நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கலைப்பிரிவினருக்கு மனத் தெளிவை உண்டாக்கும். தொடர்ந்து காரியத்தில் கண்ணாக இருக்கவும். சிலருக்கு நாகரிக வாகனம் வாங்கிய வகையில் அல்லது பழுது செய்தல் வகையில் பணச் செலவு தவிர்க்க முடியாதது. பிரயாணம் சுப காரியங்களில் முடிக்க அவசியமாக இருக்கும். இப்போது உறவினர் குடும்ப பெரியவர்கள் அனுகூலமாக இயங்குவது மகிழ்ச்சியளிக்கும். கடிதத் தொடர்பும் மகிழ்ச்சியானதே. பெண்களுக்கு நல்ல உணவு, உடைகள், சித்தி, சந்தானம் இல்லாதவர்களுக்கு புத்திர பேறு கிட்டுவதும் குறிப்பாக சிறப்பு நன்மைகளாகும். செய்தொழில் வகையில் சிறப்புத் தன்மை இருந்தும், எதிர்பார்த்தபடி பணம் பெயரவில்லை. மாணவர்களின் தேர்விலும் இப்படியே இருப்பதால் அதிக கவனம் எடுத்துக் கொண்டு படிக்கவேண்டும். பிரயாணம் முக்கியத்துவம் உள்ளதாக இருக்கும். திட்டமிட்டது தேங்கி நிற்கத்தான் செய்கின்றன. தொட்டதெல்லாம் தள்ளிப் போய்விடுகிறது. இதற்கு ஒரு காரணம் குரு உங்களுக்கு ஆகாதவன் என்பதை மறக்க வேண்டாம். சில அவசர பிரச்சினைகள் உடனே முடிக்க முடியாமல் இருப்பது உண்மை தான். என்பதை மறக்க வேண்டாம். உடல் ஆரோக்கிய பாதிப்பு சிலர் மருத்துவ சிகிச்சை பெறுவதும் குறிப்பிடத்தக்கது. உடன் இருப்பவர் அல்லது கூட்டு மனிதர்கள் போக்கு திருப்தியாக இயங்க முடியாது. இடையில் இருந்த வேற்றுமைக்கு மூன்றாவது மனிதரின் செயல், பேச்சுக்கள் தான் காரணமாக இருக்கும். இதைக் கட்டுப்படுத்தவும், பொது விஷயங்களில் ஈடுபாடு புகழ் தருவதாக அமைந்துவரும். சிலர் கட்டுமான வேலைகளைத் துரிதப்படுத்த வேண்டியிருக்கும். சகோதர, சகோதரி வகைக்கு முக்கிய செலவுகளை ஏற்பதும் அவசியமாக இருக்கும். உறவினர்களுடன் சேர்ந்து விருந்துண்பது முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக இருக்கும். குடும்பத்திற்கு கலைப் பொருட்கள் சேர்க்கையும் உண்டாகும். கடன் பட்டாலும் காரிய சாதனைகள் பெரியதாக உருவெடுத்து இருப்பதை அறிய முடிகிறது. தொழில் கூட்டு உள்ள மனிதர்களின் உயர்ந்த போக்கு உங்கள் செயல் வேகத்தை உண்டாக்கி இருக்கிறது. கணவன், மனைவி உறவு இனிக்க இருக்கும். குடும்பத்திற்கு நாகரிக வாகன சேர்க்கையும் உண்டாகும். சிலருக்கு திருமணம் கூடி வருவதால் ஜன்ம குரு கனமாக இருப்பான். ஆரம்பத்தில் கண்டச் சனி தீயவனாக இருந்தவன். இப்போது சுபக்கோள் சாரத்தில் செல்வதால், தானம் கொடுப்பவனாக குடும்ப வாழ்க்கையை சிறக்க செய்பவனாக விளங்குகிறான் என்பது கண்கூடாக காண்பதாகும். இந்த ராசி உத்தியோகப் பிரிவினர்களுக்கு, பெருமைக்குரிய பதவி உயர்வை செய்வான், பாராட்டத்தக்க இடப்பெயர்ச்சியும் செய்யக்கூடியவன் குரு. காலம் கடந்த பிரச்சினைகளை ஒரு நன் முடிவுக்குக் கொண்டு வரும்படியான சூழ்நிலை உருவாகும். கடன் சத்ருக்கள் வகையில் சில சமயம் ஏற்படும் சலன நிலை தொடர்ந்து இருக்காது.

### மிதுனம்
(மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 )

இன்னும் குரு வக்ரம் தீரவில்லையே என்பது குறைதான். கடந்த வழக்கு கட்டுப்பட்டு தான் இருக்கும். அரசியல்வாதிகள் மிகவும் அனுசரணையாக இருப்பர். அன்பும், பண்பும் நிறைந்தவர்களாக இருப்பீர்கள். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு விடுமுறை தேவைப்படும். தேக கவனம், கை, காலில் காயம்படுவதால் சிகிச்சை முதலானவையும் ஏற்படும். குடும்பச் சொத்து வகையில் சகோதர, சகோதரிகள் மன பேதம் எழுவதும் குறிப்பிடத்தக்கது. நடுப்பகுதிக்கு மேல் உடல் ஆரோக்கியம் திருப்தியளிப்பதாக இருக்கிறது. கணவன் - மனைவி உறவில் கவர்ச்சிகரமான போக்கு குடும்பத்துக்கு புத்தாடை சித்தி. புதிய ஆபரணம் வாங்குவது உண்டாகும். இந்த ராசி மாணவ, மாணவிகளுக்கு கல்வி, உயர்வு திருப்தியாகவே இருக்கின்றன. மலை வளம் சூழ்பிரதேச அரசியல்வாதிகள் சந்திப்பும் இந்தக் காலம் இருக்கும். சிலர் அயல்நாட்டுக் கடிதத்தை எதிர்பார்த்தது அனுகூலமாக வந்து சேரும். பெண்களுக்கு இது சிறப்புமிக்க காலமாகும். கூட்டுத் தொழில் உள்ளவர்களுக்கு புதிய முயற்சியும் நல்ல திட்டங்களும் உதயமாகும். குடும்பத்தில் சுபச் செலவுக்கு தயாராக வேண்டும். கூட்டு முயற்சி பலனைத் தரும். புரமோஷன் இவைகளை எதிர்பார்க்க வேண்டும். கடன் வகை கௌரவத்தை குறைக்காது. வழக்கு தள்ளிப் போய் விடும். அலைச்சல்பட்டு தான் காரிய சாதனையை புரிய வேண்டியிருக்கிறது. தொழில் இடமாற்றம், தூரத்து செய்தி அவ்வளவு திருப்தியாக இல்லை. அரசியல், அரசாங்க சம்பந்தமான மனிதர்களின் சந்திப்பு எழுத்து வகை உத்தரவுக்கு உதவியாக இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகள் அரைபலிதம் உடையது. கணவன், மனைவி உறவு ஆரம்பத்தைவிட பிற்பகுதியில் பெருமைப்பட இயங்கிவரும். நீங்கள் மற்றவர் இல்லங்களுக்கு செல்வதானாலும், அவர்கள் உங்கள் இல்லத்தில் விருந்து உண்பது நிற்காது. சொத்து வகையில் நன்மை இருக்கிறது. இந்த ராசி கான்ட்ராக்ட் தொழில் உள்ளவர்களுக்கு பில் பணம் தாமதமாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்றவைகள் நேர்முக வெற்றியை உண்டாக்கும். இப்போது தன வரவு தளர்ச்சியைப் போக்கும். புது உடைகள் நல்ல ஆகாரச் சேர்க்கையும் குறிப்பிடத்தக்கது. எனவே, பொதுவாக நன்மை, தீமை இரண்டும் கலந்த பலன்களே இருக்கும். இக்காலம் உங்கள் தேக நலத்தைக் கவனிக்க வேண்டி இருக்கிறது. சிலர் இரத்த அழுத்தம் கவனிக்க வேண்டி இருக்கிறது. வயிற்றுப் புண் போன்றவைகளினால் பாதிக்கப்பட்டு சிகிச்சையும் அவசியமாகலாம்.

### கடகம்
(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

அரசாங்க மனிதர்களின் இணைந்த ஒத்துழைப்பு தைரியசாலிகளாக மாற்றும். உங்கள் காரிய சாதனைகளுக்கு அவர்கள் பயன்படுவர். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் இடம்பெறுவது விருந்து கொள்வதும் இருக்கும் அரசியல் வட்டாரத்தினர் மிகவும் நெருக்கமாக இருப்பர். புத்திரியர் கல்வி உயர்வு மனமகிழ்ச்சிக்கு உரியதாக இருக்கும். இப்போதெல்லாம் உங்களுக்குப் பிரயாணம் அடிக்கடி உண்டாகும். இதற்கு முக்கிய காரணம் மற்றவர்கள் இல்லத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் அவசியத்தால் உண்டாவதே. இந்தச் செலவு ஆண், பெண் இரு பிரிவினருக்கும், உண்டாகக் கூடியது தான். தொழிலைப் பொறுத்தமட்டில் திருப்தியாகவே இருக்கும். தூர தேச கடிதத் தொடர்பு கூட இருக்கும். விவசாயம் செய்கிறவர்களுக்கு பொருள் உற்பத்தி தன வருவாய் உண்டாகும். இப்போது தான் இந்த ராசிக்காரர்கள் பழைய கடனை ஓர் அளவு திரும்பச் செலுத்துவார்கள். கொடுக்கல், வாங்கல் தாராளமாக அமைந்திருக்கும். இப்போது எழுத்து வகை நன்மையும் இருக்கிறது. மூன்றாவது மனிதருக்கு பிரயாணம் ஏற்பதும் உண்டாகும். கடன் இருந்தும் பாதிப்பில்லை. வழக்கு இருந்தாலும் வேகமில்லை. குழந்தைகள் வகையிலே சுபச் செலவுகளும் இருக்கின்றன. கூட்டுத்தொழில் மூலம் பெருத்த ஆதாயத்தைக் கொடுக்கும் காலம் இது. சிலருக்கு எப்போ கொடுத்து வைத்த அணிகலன்கள் சேர்க்கையும் உண்டாகும். உத்தியோகப் பிரிவினருக்கு எழுத்துமூலம் ஆதாயம், பண வரவு மகிழ்ச்சியான செய்தியை அறிதலும் உண்டாகும். இக்காலம் நீங்கள் முடிக்க வேண்டிய வேலையின் பொறுப்புகள் அதிகம். நல்ல ஆகாரமும் நல்ல உறக்கமும் உண்டாகும். கணவன், மனைவி இடையே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. குடும்ப சொத்து வகையில் இருந்து வந்த நெருக்கடிகள் குறைந்துவிட்டன. பிரயாணத்தை தள்ளிப்போட வேண்டியது இருந்தாலும் அது வழி ஆதமாயமாகவே முடியும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்கள் திடீர் திருமணம் கூடி வந்து விடும். கலைத்துறையினருக்கும் முக்கியஸ்தர்கள் முதன்மை மனிதர்கள் புதிய முடிவெடுப்பு உதவியாக இருக்கும். அரசாங்க உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு, இடமாற்றம் போன்ற நன்மைகள் சிலர் இப்போது விரிவுபடுத்துவதும் இருக்கும். கணவன், மனைவி உறவு கண்ணியமாக இருக்கும். தொழில் செய்யும் இடமாற்றம் குடியிருக்கும். இடமாறுதல் சிலருக்கு முக்கிய அம்சமாக இருக்கும். கடன் வகை ஏதும் பாதிப்பு செய்யமுடியாது. உறவினர் வழியை விட வெளி வட்டாரம் சிறப்பு மிக்கது. சில சமயம் சுகம் அனுபவிப்பதும் வெளியில் இருக்கும் புதிய நண்பர்கள் இடமாறுதல் சிலருக்கு முக்கிய அம்சமாக இருக்கும். காதல் கல்யாண சம்பந்தமான கடிதத் தொடர்புக்கு ஏற்ற காலமிது. சிலவகையில் உங்களுக்கு கூட்டு முயற்சி நன்மை தரும்.

### சிங்கம்
(மகம், பூரம், உத்தரம் 1)

இப்போது இரண்டு பெரிய கிரகங்கள் மாற்றம் பெறுவதோடு உங்கள் தொழில் வகை, வழிமுறைகளும் மாற்றி அமைக்க வேண்டியவராக இருக்கிறீர்கள். தொழில் செய்யும் இடத்தை விஸ்தரிப்பு செய்வதால் கட்டட செலவுகளும் இருக்கும். பணம் கொடுக்கல், வாங்கல் உங்கள் கௌரவம், நாணயத்தை உயர்த்துவதாகவும் இருக்கும். விடிய விடிய கண் விழித்து தன் கடமைகளை நிறைவேற்றுவதும் மகிழ்ச்சியைத் தரும். நண்பர்கள் மத்தியில் நல்ல பாராட்டுகளை உண்டாக்கும். குடும்பத்துடன் சேர்ந்து உறவினரும் விருந்து உண்பது இருக்கும். அரசாங்க மனிதர்கள் சில வகையில் உங்களுக்கு அனுகூலமாக இருப்பது தொழில் முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கும். விவசாய தொழில் உள்ளவர்களுக்கு தனவரவு செய்யும் என்பதில் சந்தேகம் இல்லை. கார், இதர இயந்திரக் கருவிகள் வாங்குவதும் குறிப்பிடத்தக்கது. உறவினர்களுக்கு விருந்தளிப்பும் இருக்கும். கட்டட வேலைகள் செய்யும் காண்ட்ராக்ட் தொழில் உள்ளவர்களுக்கு சிறப்பான தன ஆதாயம் இருப்பதுடன் கோயிலில் தரும கைங்கரியமும் செய்ய வேண்டி இருக்கும். கடன் பாதிப்பு இல்லை. கலைத்துறை தொழில் உள்ளவர்களுக்கு புதிய திருப்பம் உண்டாக்கும் என்பதால் உங்கள் செயல் வேகத்தை அதிகமாக்குவதே சிறப்பாகும். முதலீட்டு செலவாக மேலும் கடன் வாங்குவது இப்போது இருக்கும். உறவினர் போக்குவரவு மகிழ்ச்சியான போக்கை உருவாக்கும். சுப விஷயம் குறித்த கடிதப் போக்குவரவு இப்போதுதான் கனிவு பெற்றதாக இருக்கிறது. இயந்திரத் தொழில், வாகன தொழில் செய்பவர்களுக்கு வழக்கத்துக்க மாறாக பெரிய வர்வாக இருக்கும். புதிய பொருள் சிலதும் சேர்க்கப்படும். குடும்ப வகையில் குறித்தபடி நல்ல செலவுகளும் இடம் பெறச் செய்கின்றன. குடும்பத்திற்கு புது உடைகள் சேர்க்கையும் உண்டாக்கும். இடமாறுதல் செய்வதும் முக்கியமாக இருக்கும். வேடிக்கை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதும் கூட இடம்பெறும். உத்தியோக வகையினருக்கு உள்துறை இலாகா மாற்றம் சிறு பதவி மாற்றமும் கூட வேண்டி இருக்கிறது. மூதாதையர் பொருளும் வந்து சேரும். கணவன், மனைவி இடையிலே சிறு சிறு சலனமான சூழ்நிலை இருந்தும் இப்போது மறைந்துவிடும். குடும்பத்துடன் ஸ்தல பிரயாணங்களை ஏற்பதும் உண்டாகும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு இம்மாதம் சற்று அலைச்சல் உள்ள மாதமாக இருந்த போதிலும், அலுவலகப் போக்கு அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கின்றன. தனநிலை தன் நிறைவு உடையது தான் என்றாலும், குடும்பத்து சுபச் செலவுகளுக்கு கடன் வாங்கியும் செலவழிக்க வேண்டிவரும்.

### கன்னி
உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2 )

இந்த மாதத்தில் குரு மாறுதல், ராகு - கேது மாறுவது போன்ற மாற்றங்கள் இருக்கின்றன. என்பது குறிப்பிடக்கூடியது. தூர தேச மனிதர்கள் தொடர்பும் இப்போது உங்களுக்கு சுவை உடையதாக இருக்கும். குடும்பம், குழந்தைகள் இந்த வகை குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உடையவர்களாக இருப்பர். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு இருவழி தனவரவு உண்டாக்கும். காரிய சாதனையும் சுலபமாக இருக்கும். இயந்திர வகையில் செலவுகளைச் செய்ய வேண்டிய அவசியம் இப்போது இருக்கும். மலை வனப் பிரதேச மனிதர்களால் சில நன்மைகளும் இடம் பெறும். கலைத்துறை தொழில் உள்ளவர்களுக்கு சில செய்துவைத்த வேலைகள் அப்படியே ஸ்தம்பித்து நிற்கும். மிகவும் வேண்டியவர் என நினைத்தவர் மூலமே பாதிப்பு உண்டாக்கும். இதனால் வாகன சுகமும் குறையும். வரவேண்டிய பணத்திற்கு வழக்கு தொடுத்தல் முயற்சியும் உருவாகி வரும். 6 இல் குரு நேராக எந்தப் பாதிப்பையும் செய்யமாட்டார். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு சூரியன் பாக்கியத்தில் சனியுடன் சேர்ந்து இருப்பது, புதிய இடமாற்றம் பதவி உயர்வும் இருக்கும். விருந்து பாராட்டுகள் போன்றவையும் இருக்கிறது. உத்தியோகத்திற்கு மனு போட்டவர்களுக்கு நல்ல பதிலை எதிர்பார்க்கலாம். மாணவ, மாணவியருக்கு எதிர்பார்த்த மார்க்குகள் கிட்டுவது கடினம். உறவு நன்றாகவே இருக்கும். புண்ணியஸ்தல பிரயாணம் தரும செலவுகள் உண்டாகும். குழந்தைகள் ஆரோக்கியம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உடையேதே. இப்போது உங்களைச் சுற்றி உறவினரும், நண்பர்களும் உறுதுணையுடன் செயல்படுவர். பழைய பகைமை உணர்ச்சி மாறிவிட்டது. செய்தொழில் வழியில் சிறப்பான பாதைக்கு வந்துவிட்ட படியினால் செயல் முறையில் சற்று வேகமும் அதிகரித்து இருக்கிற நேரத்தில் சில சமயம் எழும் பிரச்சினை சிக்கல்களுக்கெல்லாம் காரணம் ஒரு பக்கம் 9 இல் ராகு என்பதை கவனத்தில் வைக்க வேண்டி இருக்கிறது. பண விஷயத்தில் நீங்கள் பக்குவமாக நடந்து கொள்வது மிகவும் அவசியம். இதனால் ஏற்படும் சிக்கல்கள் தான் வழக்கு வரை செல்லக்கூடும். வார்த்தையைக் காப்பாற்ற அதிக முயற்சிகள் தேவைப்படுகிறது. குடும்பத்தில் மட்டுமல்ல உங்கள் வாகனத்தைச் சீர் செய்ய அல்லது மாற்றி அமைக்க செலவு உடையவர்கள் நீங்கள். போட்டி, பந்தயம், சூதாட்டம் போன்றவைகள் தள்ளி வைக்க வேண்டியவை. நம் இல்லத்து விஷேடம் அன்றி அவ்விடத்திலும் விருந்துகொள்ள வேண்டிய்வர்கள் அரசாங்கம் அரசியல் வழி மனிதர்கள், இப்போது இணக்கமான போக்கில் இருப்பதால் உங்களது எழுத்து வேலைகளை முடித்துக்கொள்ளவும் போட்டி, பந்தயம், விளையாட்டு இவைகள் மகிழ்ச்சி தரக்கூடியவே. மறைத்திருந்த விஷயங்கள் சில மற்றவருக்குத் தெரிந்துவிடும்.

(தொடரும்...)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல: 02 ஆக்கம்: மு.விக்னேஸ்வரன் (அதிபர்)
யா.உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை

வினாத்தாள் - II நேரம்: 1.15

♦ கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து 1-10 வரையான வினாக்களுக்கு விடை எழுது..

எறும்புகள் செல்லும் நிரையைப் பார்
தூக்கிச் செல்லும் இரையைப் பார்
கூட்டத்தோடு சேர்ந்தெல்லாம்
செய்யும் தொழிலை நினைத்துப் பார்
நாமும் அதுபோல் நடந்துவிட்டால்
நாடும் உயரும் நாம் உயர்வோம்

01. எறும்புகள் எப்படிச் செல்கின்றன ..............................
02. எவற்றைத் தூக்கிச் செல்கின்றன ..............................
03. எப்படித் தூக்கிச் செல்கின்றன ..............................
04. தொழில் என்பதன் ஒத்தசொல் ..............................
05. உயர்வு என்பதன் எதிர்ச்சொல் ..............................
06. பெயர்ச்சொல் ஒன்று தருக ..............................
07. வினைச்சொல் ஒன்று தருக ..............................
08. இப்பாடல் உணர்த்தும் பழமொழி ஒன்று தருக ..............................

♦ பெயராகவும் வினையாகவும் வர வசனம் அமைக்குக.

09. பெயர் : ..............................
இரை
10. வினை : ..............................

♦ கீழே தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து 11-19 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

அன்று மழை பெய்யத் தொடங்கியது. வானுயர்ந்த அந்தக் காட்டுப்பகுதி இருளாகக் காணப்பட்டது. அங்கே பறவைகள் கச்சிட்டன. 11. புலி ..................... 12. சிங்கம் ..................... 13. .....................பிளிறின 14. ..................... ஊளையிட்டன. 15. தவளைகள் ..................... காட்டுப் பகுதி ஒரே அமர்க்களமாக இருந்தது.

♦ ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லைப் பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

16. FOREST .............................. 18. LION ..............................
17. BIROS .............................. 19. TIGER ..............................

♦ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

20. சுனாமி என்பது (வடசொல், யப்பானிய சொல், அமெரிக்கசொல்)
21. பறை ( நரம்புக் கருவி, வாத்தியக் கருவி, தோற்கருவி )

♦ 22 - 24 வரையான வினாக்களுக்கு பிழையான கூற்றின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

22. (1)குயிலின் கூட்டில் காகம் முட்டையிடும்
(2)காகத்தின் கூட்டில் குயில் முட்டையிடும்
(3)குயிலின் முட்டையை காகம் அடை காக்கும்


23. (1)நாம் சுவர்சிக்கும் வளி ஒட்சிசன்
(2)சில தாவரங்களும் இதை சுவாசிக்கும்
(3)காபனீரொட்சைட் நெருப்பெரிய உதவும்

24. (1)பாண் சத்துள்ள உணவாகும்
(2)நோயாளிகளுக்கு பாண் வழங்கப்படும்
(3)இது விரைவில் சமிபாடடையும்

♦ சரியான விடையைச் சுற்றிக் கட்டமிடுக

25. தன்னைப் பற்றித் தானே கூறுவது
(1)விடுகதை (2)முகவுரை (3)சுயசரிதை

♦ கீழே தரப்பட்டுள்ள A, B, C, D என்ற கண்ணாடிக்குவளைகளில் சில ஆணிகள் இடப்பட்டு அவை பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றை அவதானித்து வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.



A B C D

A. பெயின்ற் பூசிய ஆணிகளுக்குள் நீர் ஊற்றப்பட்டுள்ளது
B. பெயின்ற் பூசாத ஆணிகளுக்குள் நீர் ஊற்றப்பட்டுள்ளது
C. சுத்தமாக்கப்பட்ட ஆணி
D. கிறிஸ் பூசிய ஆணி

♦ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

26. இதில் துருப்பிடிப்பது,
(1)C, B (2)A, D (3)A

27. துருப்பிடிக்கத் தூண்டுவது
(1)ஈரப்பதன் /காற்று (2)நீர் / எண்ணெய் (3)பெயின்ற் / கிறிஸ்

28. காற்றில் திறந்து வைத்தால் பளபளப்புக் குறையும் உலோகம்
(1)பித்தளை (2)பொன் (3)வெள்ளி

29. துருப்பிடிப்பதன் மூலம் பொருட்களின் பலம்.
(1)கூடும் (2)குறையும் (3)சொல்லமுடியாது

பகிரதன் என்ற மாணவனின் காலைக் கடமைப்பட்டியல் கீழே ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளது. அதனை ஒழுங்குபடுத்தி இலக்கங்களை அடைப்பில் எழுதுக.

30. முகம் கழுவினான் ( )
31. பல் துலக்கினான் ( )
32. உணவு உண்டான் ( )
33. காலையில் எழுந்தான் ( )
34. பாடசாலை சென்றான் ( )
35. மலசலம் கழித்தான் ( )
36. கடவுளை வணங்கினான் ( )

♦ ஒரு பண்ணையிலுள்ள விலங்குகளின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது அட்டவணையைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடை எழுதுக.

| விலங்குகள் | எண்ணிக்கை | வினா இல | கால்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஆடு | 750 | 37. | .............................. |
| மாடு | 620 | 38. | .............................. |
| கோழி | 1450 | 39. | .............................. |
| பன்றி | 430 | 40. | .............................. |

♦ 37 - 40 வரையான வினாக்களுக்கு கால்களின் எண்ணிக்கையை அட்ட வணையில் எழுதுக.


41. பண்ணையிலுள்ள மொத்த விலங்குகள் எத்தனை ..............................
42. பண்ணையிலுள்ள விலங்குகளின் கால்களின் எண்ணிக்கை ..............................
43. ஒரு கூட்டில் 50 கோழிகளை அடைக்கலாம். முழுக் கோழிகளையும் அடைக்க வேண்டிய கூடுகளின் எண்ணிக்கை ..............................
44. ஒரு பன்றிக்கு ஒரு நாளைக்கு 1000g உணவு தேவை முழுப் பன்றிக்கும் எத்தனை kg உணவு தேவை ..............................
45. இப் பண்ணையில் மாடுகளின் கால்களா கோழிகளின் கால்களா அதிகமுள்ளது ..............................

♦ சரியான விடையின் எண்ணை அருகிலுள்ள கூட்டில் எழுதுக.

46. ஓர் எண்ணை அதே எண்ணால் பெருக்கி 3ஆல் வகுத்தால் வரும் எண் 27 ஆயின் அவ்வெண்.
(1) 7 (2) 9 (3) 11 (4) 13

47. 9+ 3 -6
(1) 3 x1 x 1 (2) 2 x2 x 1 (3) 3 x2 x 1 (4) 3 x3 x 0

48. கீழே மின் காந்தம் உருவாக்கும் முறை காட்டப்பட்டுள்ளது. இவற்றில் எந்த வரிப்படத்தில் உள்ள ஆணியில் அதிகளவு காந்த சக்தி காணப்படும்?



(1) (2) (3) (4)

49. இயற்கை அனர்த்தங்களால் முற்றாக அழிந்த உயிரினம்
(1)முதலை (2)டைனோசர் (3)கங்காரு (4)வரிப்புலி

50. இலங்கையில் மழை வீழ்ச்சி குறைந்த மாவட்டம்
(1)அனுராதபுரம் (2)வவுனியா (3)மன்னார் (4)அம்பாறை

♦ சுருக்கமான விடை தருக

51. இரவில் இரைதேடும் பறவை ஒன்று ..............................
52. இலங்கையில் நிர்வாக மாவட்டங்கள் எத்தனை ..............................
53. விவசாயிகளுக்கு உதவி செய்யும் புழு ..............................
54. செயற்கைப் பசளை ஒன்றின் பெயர் ..............................



♦ மேலே தரப்பட்டுள்ள படத்தை அவதானித்து நடைபெற்ற சம்பவத்தை உமது கற்பனையில் தொடர்ந்து எழுதுக

கமலன் வெள்ளைப் பிரம்புடன் வந்த ...

55.------------------------------
56.------------------------------
57.------------------------------
58.------------------------------
59.------------------------------
60.------------------------------

# சீரழியும் சினிமா

## திருந்த இடமுண்டா?

இன்றைய உலகில் சினிமா ஓர் அற்புத சாதனம். அதன்மூலம் எந்தக் கருத்தையும் மற்றைய ஊடகங்கள் மூலம் வெளியிடுவதை விட அதிக அழகோடும் வேகத்தோடும் பயனோடும் வெளியிட முடியும். இந்தச் சாதனம் வருங்காலத்தில் மனித இனத்தின் தன்மையையும் போக்கையும் பிரமாதமாக மாற்றி அமைக்கும் என்ற நம்பிக்கை இன்று வெளிவரும் திரைப்படங்களைப் பார்க்கும்போது மெல்ல மெல்லக் குறைந்துகொண்டே போகிறது.

இன்று சினிமா, மண்ணின் ஆன்மாவைப் பிரதிபலிக்கின்றதா? மனித சமூகத்தின் நோக்கத்தையும் போக்கையும் பராமரிக்கும் வழித்தடத்தில் வளர்த்தெடுக்கின்றதா? என்ற கேள்விகளுக்கு 'ஆம்' என்று பதில் சொல்வது சற்றுக் கடினமாகத்தான் இருக்கிறது.

ஓவியன் அழகான ஓவியத்தையும், சிற்பி தெய்வீகக் களை ததும்பும் சிற்பத்தையும், பேனா பிடிப்பவன் வாழ்க்கையின் அடியாழங்களை அர்த்தபூர்வமாக வெளிப்படுத்தும் இலக்கியத்தையும் படைத்தளிக்கும்போது, அங்கே உடன் நிகழ்வாக ஓர் உயர்ந்த கலை கண் விழிக்கிறது. கலைத் தரிசனத்தில் பரவசமுறும் கலைஞனுக்கு அதுதான் சிருஷ்டித் தொழில். அவன் தேவைகளை நிறைவேற்றித் தரும் வியாபாரமும் அதுவே.

சினிமா ஒரு கலையாக, தொழிலாக, வியாபாரமாக முப்பரிமாணம் கொள்ளும் ஆற்றல் பெற்றது. ஆனால் நம் திரைப்படப்



பிரமாக்கள் சிலர் 'நாங்கள் யாரும் கலைச் சேவை செய்ய வரவில்லை' என்று தெள்ளத் தெளிவாகப் பிரகடனம் செய்கின்றனர். அப்படியானால் சினிமா அவர்களுக்குத் தொழிலா? என்று அடுத்த கேள்வி எழுகிறது. 'நமக்குத் தொழில் கவிதை' என்றான் பாரதி. சுயநலக் கலப்பு இல்லாமல் மனித குலத்துக்கு நன்மை செய்வதுதான் பாரதியின் பாதையில் தொழில்.

### வியாபாரமாக மாறும் சினிமா

சினிமா வெறும் வியாபாரம் தான் என்பதை ஒப்புக்கொள்வதில் திரைப்படப் பிரமாக்களுக்கு அணுவளவும் கூச்சம் இல்லை. வியாபாரம் பாவம் அல்ல. நோய் தீர்க்கும் மருந்து விற்பதும், உயிர்வளர்க்கும் உணவு தருவதும் வியாபாரமே! மனிதர்களை மயக்கத்தில் ஆழ்த்தி அவர்கள் வாழ்வைச் சீரழிக்கும் மது விற்பனையும் வியாபாரம்தான். தமிழ் சினிமா, போதைதரும் லாகிரி வஸ்து வியாபாரமாக மாறிவருவது தான் ஆழ்ந்த கவலைக்கும் பரிசீலனைக்கும் உரியதாகிறது.

சமூகப் பயன்பாடு மிக்க ஒரு கலைப்படைப்பாக, அல்லது ரசிகர்களின் மன உணர்வுகளை மலினப்படுத்தாத பொழுதுபோக்குப் படைப்பாக ஒரு படத்தை உருவாக்க முதலில் தயாரிப்பாளர் திட்டமிட வேண்டும். கதை, இயக்குநர், தொழில்நுட்பக் கலைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் தொழில் திறமை அவருக்கு வேண்டும்.

'ஜெமினி' வாசன், 'ஏ.வி.எம்' மெய்யப்பன், 'வாகினி' நாகிரெட்டி, 'மாடர்ன் தியேட்டர்' சுந்தரம் போன்ற தயாரிப்பாளர்களுக்கு இருந்த மரியாதை இன்றுள்ள பல தயாரிப்பாளர்களுக்கு இல்லை. ஏன்? பணம் இல்லாமல் படமெடுப்பவர்கள் இன்று பெருகி வட்டிக்குப் பணம் வாங்கிப் படமெடுக்கும் பரிதாபம் ஏன் வந்தது? பெரிய நடிகர்களின் பின்னால் தயாரிப்பாளர் பூனை போல் பதுங்கும் பரிதாபம் ஏன் ஏற்பட்டது?

### ஆளுமை மிக்க தயாரிப்பாளர்

அந்தக் காலத்தில் திரையுலகின் முடிசூடா மன்னர்களில் ஒருவராக விளங்கிய பி.யூ.சின்னப்பா ஒருமுறை படப்பிடிப்புக்குத் தாமதமாக வந்ததால், அவரை மரத்தில் கட்டிவைத்தவர் மாடர்ன் தியேட்டர்ஸ் சுந்தரம். பாடலாசிரியர் உடுமலை நாராயண கவியை தாக்கு



வதற்கு சின்னப்பா முனைந்த போது, துப்பாக்கியைக் காட்டி அவரை அச்சுறுத்தியவர் சுந்தரம். இன்று அந்த அளவுக்கு அச்சுறுத்த முயலவேண்டாம். ஆனால் இன்றுள்ள தயாரிப்பாளர்களைப் போல கைகட்டி வாய்புதைத்து நிற்க வேண்டுமா?

இன்றுள்ளன போல அல்லாதுதொழில்நுட்பவசதிகள் மிக மிகக் குறைவாக இருந்த அந்தக் காலத்தில் பி.யூ.சின்னப்பாவை இரட்டை வேடத்தில் நடிக்க, வைத்து 'உத்தம புத்திரன்' என்ற வெற்றிப் படத்தைத் தயாரித்தவர் சுந்தரம். தமிழ்த் திரைப்பட உலகிலேயே முதன் முதலில் 'அலிபாபாவும் 40 திருடர்களும்' என்ற கலர்ப் படத்தைத் தயாரித்ததும் அவரது மார்டன் தியேட்டரே.



இருந்த சொற்ப வசதிகளைப் பயன்படுத்தி அகில உலகப் புகழ் பெற்ற 'சந்திரலேகா' என்ற திரைப்படத்தைத் தயாரித்தவர் ஜெமினி ஸ்ரூடியோ வாசன். ஆனால் இன்று தொழில்நுட்பம் கொடி கட்டிப் பறக்கும் நிலையில் எடுக்கப்படும் படங்கள்...?

### பார்ப்பனியத்துக்கெதிராக போர்க்கொடி

தமிழ்ப் படங்களின் தந்தையென்று போற்றப்பட்ட கே.சுப்பிரமணியம் தயாரிப்பாளராகவும் இயக்குநராகவும் இயங்கியவர். காதல் காட்சிகளே இல்லாமல் அந்த நாளில் 'பக்த குசேலா' என்ற வெற்றிப்படத்தை எடுத்தவர். 20வயதான



சுப்புலட்சுமி 27 குழந்தைகளுக்குத் தாயாக அந்தப் படத்திலே நடித்தார். ஆனால் இன்று 30 வயது நடிகை 3வயதுக் குழந்தைக்குத் தாயாக நடிக்கத் தயங்குகிறார். பிராமண குலத்தில் பிறந்த சுப்பிரமணியம் பார்ப்பனிய ஆசாரங்களுக்கு எதிராகவும் பூணூலை கதாநாயகன் அறுத்தெறிவதாகவும் 'சேவாசதனம்' படத்தில் காட்டிய புரட்சிக் கலைஞர்.

இவர் தயாரித்து இயக்கிய 'கல்கி'யின் 'தியாகபூமி' படத்தில் சம்பு சாஸ்திரி என்ற பிராமண குலத்துதித்த ஆசாரசீலர் சேரி மக்களுடன் சேர்ந்து வாழ்வதாகவும் பாலியல் தவறிழைத்த கணவனிடம் விவாகரத்து வேண்டி நீதிமன்றம் ஏறிய 'தியாகபூமி' படத்தின் கதாநாயகி சாவித்திரி தேவைப்பட்டால் தன் கணவனுக்கு ஜீவனாம்சம் தருவதற்குத் தான் தயார் என்று கூறுவதாகவும் படத்தில் காட்சிகளை அமைத்திருந்தார். அதனால் பிராமண சமூகம் அவரை ஜாதிப் பிரஷ்டம் செய்தது.

### தடையைப் பொடியாக்கிய தயாரிப்பாளர்

தியாகபூமி கதாநாயகி சாவித்திரி சுதந்திரப் போரில் ஈடுபட்டதால் அப்படத்துக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் தடை உத்தரவு பிறப்பித்தது. தடை ஆணை திரையரங்குகளுக்கு வருவதற்கு முன்பே சுப்பிரமணியம் ஒருநாள் முழுவதும் மக்களுக்கு இலவசமாகப் படத்தைக் காட்டினார். அப்படி அன்று சாதி எதிர்ப்பையும், அரசின் தடையையும் மீறி மக்களுக்கு நல்ல படம் தந்தார் சுப்பிரமணியம். ஆனால் இன்றைய படங்களில் காமக் காட்சிகள் எல்லை மீறிவிட்டன என்று சமீபத்தில் ஒரு படம் நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்டிருக்கிறது. எங்கே போகிறது இன்றைய தமிழ் சினிமா?

மாடர்ன் தியேட்டரின் தயாரிப்பான 'மனோன்மணி' படத்தில் சின்னப்பா புலித்தோல் ஜட்டியும் முண்டா பனியனும் அணிந்து சண்டை போடும் காட்சி குடும்பப் பெண்களைக் கூச வைத்ததாக அன்று கல்கி விமர்சனம் செய்திருந்தார். தமிழ்நாடு டாக்கீஸ் என்ற பட நிறுவனம் 1934இல் தயாரித்த 'லவகுசா' என்ற படத்தில் சீதையாக நடித்த லட்சுமி என்ற நடிகை இராமன் பக்கத்தில் நெருங்கி அமர மறுத்து படம் முழுவதும் விலகி நின்றே நடித்தார். அன்றைய காலகட்டத்தில் கதாநாயகன் கதாநாயகியை அணைத்தபடி கட்டிலில் அமர்வதே விரசமாகக் கருதப்பட்டது.

சௌகார் ஜானகி, சாவித்திரி, பானுமதி, தேவிகா போன்ற தென்னாட்டு நடிகைகள் நடித்த படங்களில் விரசம் என்பதை துளிகூடக் காணமுடியாது. ஆனால் இன்று வடநாட்டிலிருந்து புற்றீசல் போல இறக்குமதி செய்யப்படும் கதாநாயகிகள் அரைகுரை ஆடையுடன் களியாட்டம் போடாத படங்களே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

### கதையம்சமற்ற விரசம் ததும்பும் திரைப்படங்கள்

இன்று திரைக்குவரும் பெரும்பாலான தமிழ் சினிமாக்களில் நல்ல கதையம்சமே இல்லை என்பது வருத்தமளிக்கும் விடயம். விரசம் ததும்பும் அங்க அசைவுகளுடன் பாடல் காட்சிகள், மிருக உணர்வைத் தூண்டும் பயங்கரமான வன்முறைக் காட்சிகள், கோமாளித் தனத்தில் சேர்க்கமுடியாத சில நகைச் சுவைக் காட்சிகள், இவற்றோடு கொஞ்சம் பாசம், கொஞ்சம் சோகம் என்று ஒரு குறிப்பிட்ட ஃபார்முலாவின் குணாம்சங்களுடன் ஒரே மாதிரியான சினிமா- வெவ்வேறு நடிகர்கள், இயக்குநர்களின் கூட்டு முயற்சியில்



ரசிகர்களை மாறிமாறி முற்றுகையிடுகின்றன. 'தாயோடறுசுவைபோம்' என்ற விதத்தில் கலைவாணருடன் சிரிக்கவைத்து சிந்திக்க வைத்த நகைச்சுவை பாரம்பரியம் அற்று போய்விட்டது துரதிர்ஷ்டமே!

பாசமலர், பாகப்பிரிவினை, படிக்காத மேதை, படித்தால் மட்டும் போதுமா? போன்ற குடும்ப உறவுகளைப் பேசும் படங்களையோ, வீரபாண்டியன் கட்டப்பொம்மன், கப்பலோட்டிய தமிழன் போன்ற நாட்டுப்பற்றை ஊட்டும் திரைச்சித்திரங்களையோ, நல்லதம்பி போன்ற நகைச்சுவை கலந்த சித்திரத்தையோ மக்களுக்குத் தரும் மனோநிலை ஒரு சிலருக்கே இருக்கிறது. ஓர் 'உதிரிப் பூக்கள்', ஒரு 'பதினாறு வயதினிலே', ஓர் 'அவள் அப்படித்தான்' என 12 வருடங்களுக்கு ஒருமுறை தான் நம் கலையுலகத்தில் குறுஞ்சிப்பூ பூக்கிறது.

### ரசிகர்களின் ரசனை

'மட்டமான ரசனையையூட்டும் படங்களை மட்டும்தான் நாங்கள் பார்ப்போம்' என மக்கள் அடம்பிடிப்பது உண்மையானால் 'அழகி'யும், 'ஆட்டோகிராஃப்'பும், 'பார்த்திபன் கனவும்', 'அழகியதீயே' யும் எப்படி வெற்றி பெற்றன? மண்வாசனை மணக்க' வாழ்க்கைப் போராட்டங்களை கலைத்தன்மை சிதையாமல் திரையிலே வடித்துக் கொடுக்க எத்தனை இயக்குநர்கள் இருக்கிறார்கள்? பாத்திரங்களாகவே வாழ்ந்துகாட்டும் வல்லமைமிக்க நடிகர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள்? பி.ஆர்.பந்துலுவைப் போல, ஏ.பி.நாகராஜனைப் போல இன்று எத்தனை தயாரிப்பாளர்கள் இருக்கிறார்கள்? அசிங்கமான படங்களை எடுக்கக் கூடாது என்று கூச்சம் கொள்ளும் படத்தயாரிப்பாளர்களும் ஒரு சிலர் இருக்கிறார்கள். ஆனால் நல்ல படங்களுக்கு மட்டும் இப்போது பஞ்சம்.

'படக்கலை தான் வாராதா என நினைத்த நெஞ்சம் பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால் படக்கலையாம் சனி ஒழிந்தால் போதுமென எண்ணும்'.

'ஒன்றுக்குப் பத்தாகச் சம்பாதிப்பதுதான் எங்கள் நோக்கம். திரை அரங்குகளை நோக்கி வெகுஜனங்களை ஈர்ப்பதற்கு நாங்கள் எந்த அளவும் கீழே இறங்கிச் சகதியில் கால்வைத்துச் சதிராடுவோம்' என்று சினிமா உலகம் இன்று சொல்லாமல் சொல்கிறது. அதனாலேதான் காட்சிகளில் இரட்டை அர்த்த நகைச் சுவைகளில், காதலன் காதலி பாடும் பாடல்களில் 'அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்' விரசம் தன் விளிம்பை மீறுகிறது.

சின்னப்பாவும் கண்ணாம்பாவும் நடித்த 'கண்ணகி' திரைப்படத்தில் நீண்டநாள் பிரிந்திருந்த கோவலன் திரும்ப வந்து கண்ணகியைக் காண்கிறான். 'உன் அழகும் இளமையும் எங்கே போயிற்று' என்று கண்ணகியிடம் கேட்கிறான்.

அதற்கு அவள், 'காதலுக்கு அர்ப்பணிக்க முடியாததை காலத்திடம் அர்ப்பணித்துவிட்டேன்' என்கிறாள். இளங்கோவன் வசனமே ஓர் அழகிய இலக்கியம். இன்று அப்படியான வசனங்களை எதிர்பார்க்க முடியுமா?

திரைக்கதை, வசனத்தில் திருப்புமுனையை உருவாக்கியவர் அறிஞர் அண்ணாவும் அவருக்கு அடுத்தபடியாக கலைஞர் கருணாநிதியும் என்பதை அவர்களுடைய அரசியல் எதிரிகளாலும் கூட மறுக்கமுடியாது!.

(தொடரும்...)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

22 மீள்பார்வை



பக்த துக்காரம் பாடத்தில்...(1973)

டி.எஸ்.என். தமிழ் மக்களிடையே பகுத்தறிவுக்கொள்கைகளைப் பரப்புவதற்காக நடத்திய இந்த மகாநாட்டில் தமிழ் நாட்டைச் சேர்ந்த சேர,சோழ பாண்டிய பல்லவ மன்னர்களை விட்டுவிட்டு அறிஞர் அண்ணா அவர்கள் சிவாஜியினுடைய வரலாற்றை எடுத்துக் கொண்டு சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் என்ற நாடகத்தை ஏன் எழுதினார்.

சிவாஜி: மிகவும் அருமையான கேள்வி பெரியாருடைய வேலை சமூக சீர்திருத்தம் செய்வதுதான் அண்ணாவினுடைய வேலையும் அது தான் இந்த சிவாஜியை ஏன் எடுத்துக்கொண்டார்கள் என்றால் சிவாஜி இந்தியாவிலேயே மாபெரும் வீரன் பலராலும் வீரனென்று போற்றப்பட்டவன்.

சாதாரணக் குடிமகனாக இருந்து பெரிய மன்னன் ஆனவன் வெளிநாட்டிலிருந்து வந்த அன்னிய சக்தி நம் நாட்டில் இருக்கக்கூடாது என்றும் அவர்கள் இங்கு தலை வைத்துப் படுக்கக்கூடாது என்றும் இந்த நாட்டை இந்த நாட்டுக்காரன்தான் ஆள வேண்டும் என்றும் போராடினான்.

பெரிய மராட்டிய சாம்ராஜ்யத்தையே உருவாக்கினாலும் அரசனாக முடிசூட்டிக்கொள்ள அவனுக்கு வாய்ப்புக் கிடையாது காரணம் என்னவென்றால் அவன் தாழ்ந்த குலத்துப் பையன் அப்பொழுது நமது இந்துக்களுக்குள்ளேயே உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றும் மேல் ஜாதி கீழ் ஜாதி என்றும் பாகுபாடுகள் இருந்தது அல்லவா? மகாத்மாகாந்தி அந்த பாகுபாட்டை ஒழிக்கத்தானே பாடுபட்டார். காந்திஜி அங்கு பாடுபட்டார். பெரியார் இங்கு நம் மூரில் பாடுபட்டார். சிவாஜியை எதிர்க்கக்கூடிய சக்தி உள்ளூர் இந்துக்களிடம் இருந்தது எனவே காசியிலிருந்து ஒரு பெரிய மதத்தலைவரை அழைத்து வந்து இந்த கீழ் ஜாதிப் பையனை ஷத்ரியனாக மாற்றினார்கள்.

அதன் பிறகுதான் சிவாஜி சிம்மாசனம் ஏற இந்துக்கள் சம்மதித்தார்கள். அவ்வளவு பெரிய மன்னர் மக்களுகெல்லாம் நல்லது செய்தவர் அவருக்கே இந்த நிலைமை என்றால் மற்றவர்களின் நிலை என்னாகும்?

சாதாரணமாக ஞழ்மை நிலையில் இருக்கின்றவனுக்கும் தாழ்த்தப்பட்ட ஜாதியினருக்கும் இது மாதிரியான நிலைமை ஏன் ஏற்படாது? என்பதை எடுத்துக் கூறுவதே ஐயாவினுடைய வேலையாகவும் அண்ணாவினுடைய வேலையாகவும் இருந்தது. எனவே இந்த நாடகத்திற்கு மராட்டிய மன்னன் சிவாஜியைத் தேர்ந்தெடுத்து சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் என்ற நாடகத்தை நடத்தினார்கள்



"சக்தி நாடக சபா" குழுவில் நிற்பவர்களில் இடமிருந்து ஐந்தாவது வி.சி.கணேஷன்...

டி.எஸ். என்: உங்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் இந்த மகாநாடும் அதில் நீங்கள் சிவாஜியாக நடித்ததும் ஒரு திருப்புமுனை அதில் நீங்கள் சத்ரபதி சிவாஜி வேஷம் போட்டு எப்படி பேசி இருப்பீர்கள்? அந்த தமிழ் வசனங்களை ரசிகர்களுக்காக கொஞ்சம் பேசிக் காட்டுங்களேன்?

சிவாஜி: அதோ தோர்ணா! அந்தக் கோட்டையைப் பிடிக்க நடந்த பயங்கரச் சண்டையை நினைத்துக்கொண்டால்... எதிரியைத் துரும்பாக மதித்த சிவாஜியின் இன்றைய நிலைமையை ஒப்பிட்டால்... எனக்கே வெட்கமாகத்தான் இருக்கிறது.

"பிரபு! அந்தப் பக்கம் போகக் கூடாது. எதிரியின் படைப் பலம் அதிகம்" கோழைகள் விலகட்டும் வீரர்கள் பின் தொடரட்டும் கொட்டும் முரசென்று பாய்ந்து சென்று வெற்றிபெற்ற புரந்தர் என்றெல்லாம் வசனம் பேசி இருப்பேன். இப்பொழுது திடிரெனக் கேட்டால் நான் எப்படி சொல்லுவது எனக்குப் பல வரிகள் மறந்து போய்விட்டன.

டி.எஸ்.என். சுயமரியாதை மகாநாட்டில் நடந்த சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் என்ற நாடகம் பிறகு தொடர்ந்து நடந்ததா?

சிவாஜி: அநேகமாக அது நடக்கவில்லை பகுத்தறிவு மகாநாட்டில் நாடகம் முடிந்தவுடன் நாங்கள் எல்லோரும் காஞ்சீபுரம் சென்றுவிட்டோம்.



மராட்டிய மன்னன் சத்ரபதி சிவாஜியாக ராமன் எத்தனை ராமனடி படத்தில்...

ஏனென்றால் கே.ஆர். ராமசாமி அவர்கள் நாடகக் கம்பெனி ஆரம்பிப்பதற்காக அப்போது முயற்சி செய்துகொண்டிருக்கிறார் என்று சொன்னேன் அல்லவா? எனவே நாங்கள் மீண்டும் காஞ்சீபுரத்திற்கே சென்றுவிட்டோம். அங்கு சென்றவுடன் கே.ஆர்.ராமசாமி அவர்கள் தன்னுடைய நாடகக் கம்பெனியை தஞ்சாவூரில் ஆரம்பித்தார். அண்ணாவின் ஆசியுடன் எல்லோரும் தஞ்சாவூர் சென்றுவிட்டோம் அதற்கு பிறகு தஞ்சாவூரில் நாடகங்கள் நடந்தன.

முன்பு போல் கே.ஆர் ராமசாமி அவர்கள் மனோகரா போன்ற நாடகங்களை நடிக்கத் தொடங்கிவிட்டார்கள் .மீண்டும் நான் பெண் வேஷத்தில் பத்மாவதியாக நடித்தேன் இப்படி நடித்துக் கொண்டிருக்கும் போதுதான் அண்ணா அவர்கள் ஓர் இரவு என்ற நாடகத்தை எழுதினார். கே.ஆர்.ராமசாமிக்காக அந்தநாடகம் எழுதப்பட்டது. நானும் அதில் நடிப்பதாகத்தான் இருந்தது. ஆனால் அந்த நேரத்தில் எனக்கும் கே.ஆர். ராமசாமி நாடகசபாவில் இருப்பவருக்கும் கொஞ்சம் மனதளவில் பிரச்சினை ஏற்பட்டது. எனவே நான் மீண்டும் அண்ணாவிடமே வந்துவிட்டேன்.

அண்ணா எழுதிய ஓர் இரவு நாடகத்தில் கே.ஆர் ராமசாமி அவர்கள் நடித்துக்கொண்டிருந்தார். நான் அந்த நாடகத்திற்குக்கூடப் போகவில்லை .அண்ணா அவர்களுடனே இருந்துகொண்டேன் அப்பொழுதெல்லாம் அண்ணா பல அரசியல் கூட்டங்களுக்குச் செல்வார் நானும் அவருடன் செல்வேன் எனக்கும் அவர் பயிற்சி அளித்துக்கொண்டிருந்தார்.

(தொடரும்)

# மாவீரர் துயிலும் இல்லத்தில் இன்று நடுகல் திரை நீக்கம்

(கிளிநொச்சி)

பல்வேறு சம்பவங்களின் போது வீரச்சாவடைந்த மாவீரர்களுடைய நினைவுக்கற்கல் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் இன்று திரைநீக்கம் செய்யப்படவுள்ளது. இம் மாவீரர்களினுடைய திருவுருவப்படங்கள் நேற்று அவர்களுடைய இல்லத்தில் மக்கள் வணக்கத்திற்காக வைக்கப்பட்டு இன்று அவர்களின் இல்லங்களில் இருந்து அலங் கரிக்கப்பட்ட ஊர்தியில் ஊர்வலமாக எடுத்துவரப்படவுள்ளது.

காலை 10.00மணிக்கு பளை மத்திய கல்லூரியில் மக்கள் இறுதி வணக்கத்திற்காக வைக்கப்பட்டு வீர வணக்கக் கூட்டம் இடம்பெற்று அங்கிருந்து எடுத்துச்செல்லப்பட்டு கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் நடுகல் திரைநீக்கம் செய்து வைக்கப்படவுள்ளது.

17.7.1987 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சாவகச்சேரி மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலின் போது வீரச்சாவடைந்த வீரவேங்கை சச்சி என்று அழைக்கப்படும் புலோப்பளை மேற்குப் பளையை சொந்த முகவரியாகக் கொண்ட செல்லத் துரை சச்சியானந்தன் 9.11.1987 அன்று யாழ்ப்பாணம் மானிப்பாய்ப்பகுதியில் இந்திய இராணுவத்தினருடனான மோதலின் போது வீரச்சாவடைந்த லெப்ரினன் நகுலன் என்று அழைக்கப்படும் புலோப்பளை மேற்கு பளையை சொந்த முகவரியாகக் கொண்ட செல்லத்துரை சூரிய பிரதாபன் ,30.5.1987 அன்று யாழ்ப்பாணம் வீமன்காமம் பகுதியில் இலங்கை இராணு வத்தினருடனான மோதலின் போது வீரச்சாவடைந்த கப்டன் செல்வம் என்று அழைக்கப்படும் புலோப்பளை மேற்கு பளையைச் சொந்த முகவரியாகக்கொண்ட செல்லத்துரை தெய்வ சபானந்தன் 17.5.1992 அன்று சுகவீனம் காரணமாக சாவடைந்த நாட்டுப்பற்றாளர் வள்ளிப்பிள்ளை என்று அழைக்கப்படும் புலோப் பளை மேற்கு பளையை சொந்த முகவரியாகக் கொண்ட செல்லத்துரை வள்ளிப்பிள்ளை 27.11.1989 பளை புலோப்பளை பகுதியில் தேச விரோதிகளின் தாக்குதலின் போது வீரச்சாவடைந்த வீர வேங்கை பவுணன் என்று அழைக்கப்படும் தம்பலகாமம் பளையை சொந்த முகவரியாகக் கொண்ட செல்லத்துரை யோகேஸ்வரன் 1.2.1998 அன்று கிளிநொச்சிப் பகுதியில் இராணுவத்தினருடனான நேரடி மோதலின் போது வீரச்சாவடைந்த லெப்ரினன் பத்திரா என்று அழைக்கப்படும் மல்லில் இயக்கச்சி, பளையை சொந்த முகவரியாகக் கொண்ட துரைசிங்கம் சந்திரமதி ஆகியோரின் நினைவு நடு கற்களே திரை நீக்கம் செய்து வைக்கப்பட வுள்ளது. (கு)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் 1, 15, 503 பேருக்கு சிகிச்சை

(தென்மராட்சி)

சாவகச்சேரி மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் 2005ஆம் ஆண்டில் மொத்தமாக ஒரு இலட் சத்து 15ஆயிரத்து 503 பேர் சிகிச்சை பெற்றுள்ளன. என வைத்தியசாலை தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது. இத் தொகையில் 92ஆயிரத்து 428 பேர் வெளி நோயாளர் பிரிவிலும் 6 ஆயிரத்து 471 பேர் உள்ளக விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இவ் வைத்தியசாலையில் கடந்த வருடத்தில் மட்டும் 338 குழந்தைகள் பிறந்துள்ளனர். அத்துடன் இரத்த அழுத்தம்,நீரிழிவு போன்றவற்றுக்கான சிகிச்சைகளை 12 ஆயிரத்து 155பேரும் பெற்றுள்ளனர்.

மேலும் விசர் நாய் கடியினால் பாதிக்கப்பட்ட 761 பேருக்கு கடந்த வருடம் நோய்த்தடுப்பு ஊசிகள் ஏற்றப்பட்டுள்ளமையும் இங்குகுறிப்பிடத்தக்கது. (கு-16)

# சுனாமியால் பாதிப்புற்ற மீனவருக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு கியுடெக் -கரித்தாஸ் நிறுவனம் யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களில் படகுகள் அவுட்போட் மோட்டார்கள் மற்றும் வலைகளை வழங்கியுள்ளது.

இந்த வகையில் 400 படகுகளையும் 417 அவுட்போட் மோட்டார்களையும் 12 ஆயிரம் வலைகளையும் வழங்கியுள்ளதாகத்தெரியவருகிறது. இதே சமயம் கியூடெக் -கரித்தாஸ் , நிறுவனம்,யாழ்ப்பாணம் , வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லைத்தீவு பிரதேசங்களில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட 3 ஆயிரத்து 744 பயனாளிகளுக்கு 936 இடைத்தங்கல் குடியிருப்புக்களையும் அமைத்துக் கொடுத்துள்ளது.

இவ்வகையில் யாழ்ப்பாணத்தில் 500 குடியிருப்புக்களும் வடமராட்சி கிழக்கில் 253 குடியிருப்புக்களும் முல்லைத்தீவில் 174குடியிருப்புக்களும் அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (து-16)

# 81 மாணவர்கள் லயன்ஸ் கழகத்தால் கௌரவிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் 5ஆம் ஆண்டு புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த 81 மாணவர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகம் வழங்கி கௌரவித்துள்ளது. கழகத்தின் தலைவர் லயன் கே. சிவபால சுப்பிரமணியம் தலைமையில் அண்மையில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது லயன்ஸ் கழகங்களின் நீரிழிவுத் திட்டத்தின் மாவட்டத் தலைவர் லயன் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் பிரதம விருந்தினராகப் பங்கு கொண்டு அன்பளிப்புப் பொருட்களை மாணவர்களுக்கு வழங்கி வைத்தார்.

இந் நிகழ்வின் போது பல பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் மற்றும் லயன்ஸ்கழக உறுப்பினர்களும் பங்கு கொண்டிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (கு-16)

# போதைப்பொருள் விற்பனையில் வீழ்ச்சி

நாட்டில் சட்டவிரோதமான முறையில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுவோரை கைது செய்யும் நடைமுறை திருப்திகரமாக இடம்பெற்றுவருவதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதனைத் திருப்திகரமாக மேற்கொள்வதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பே காரணம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


அவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே பல கைதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்த நிலைமை காரணமாக கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பாகங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டவிரோத போதைப் பொருள் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்தச் சட்டவிரோத போதைப் பொருள் பாவனையை முற்றாக ஒழிப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாக பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (க-7)









நேற்று நண்பகல் மின்சார நிலைய வீதி இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலையடுத்து, இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் பதற்றத்துடன் சிதறியோடிய மக்களையும், சன நடமாட்டமின்றி வெறிசோடிக்கிடக்கும் மின்சார நிலைய வீதி ஓட்டோ தரிப்பிடத்தையும் மினிபஸ் தரிப்பிடத்தையும் இழுத்துப் பூட்டப்பட்ட வர்த்தக நிலையங்களையும் படங்களில் காணலாம்.

படங்கள்:- திலீவின்பன், எஸ்.ரீ.ராஜா

# உலர் உணவு நிவாரணம்

குட்டிநாட்டின் அசாதாரண நிலைமைகளை அடுத்து கடற்றொழில் செய்ய முடியாது பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசஅதிபர்கேகணேஷ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றையும் அரச அதிபர் கடற்றொழிலால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வசிக்கும் வடமராட்சி வடக்கு, சண்டிலிப்பாய், சங்கானை, வேலணை ஆகிய பிரதேசங்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இச் சுற்றறிக்கையில் மீன் பிடிப்பதற்கு தடைசெய்யப்பட்ட பிரதேசம், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை மீன் பிடிப்பதற்கு பாவிக்கப்பட்ட படகுகள் கட்டு மரங்கள், தும்புக் கண்ணாடி வள்ளங்கள் ஆகியவற்றின் விபரங்களை யாழ்.மாவட் டச் செயலகத்துக்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (து-49)

# வெள்ளத்தால் பாதிப்புற்றவர்களுக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவு

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் கடந்த வருடம் ஏற்பட்ட மழை வெள்ளம் காரணமாகசேதமடைந்த வீடுகளுக்கு நஷ்டஈட்டுக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் மேற்கொண்ட துரித முயற்சியின் காரணமாக, பாதிக்கப்பட்ட 47 குடும்பங்களுக்கு சமூக சேவைத் திணைக்களம் 3 இலட்சம் ரூபா நிதியை வழங்கியிருந்தது.

பிரதேச செயலகம் ஊடாக வழங்கப்பட்ட இந்நிதி, ஒரு குடும்பத்துக்கு ஆகக்கூடிய தொகையாக ரூபா 12,000 வீதம் வழங்கப்பட்டதாக பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

வலி-மேற்குப் பிரதேசத்திற்குட்பட்ட அர்ராலி, தொல்புரம், சுழிபுரம், வட்டுக்கோட்டை ஆகிய கிராமங்களில் வாழும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கே மேற்படி நிதி வழங்கப்பட்டது. (து-49)

53 உள்ளூராட்சி சபைகளுக்கான நியமனப் பத்திரங்களை ரத்துசெய்யும்

# அரசியல் அமைப்பு இணக்கம் குறித்த விசாரணைகள் பூர்த்தி

ஏற்கனவே கோரப்பட்ட வடக்கு-கிழக்கின் 53 உள்ளூராட்சி சபைகளுக்கான நியமனப் பத்திரங்களை இரத்துச் செய்யும் சட்டமூலத்தின் அரசியல் அமைப்பு இணக்கம் தொடர்பிலான விசாரணைகள் நேற்று முன்தினம் நிறைவடைந்தன.

இதன்படி இது தொடர்பான இரகசியத்தீர்ப்பு ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் எதிர்வரும் மார்ச் மாத இறுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது அனைத்துப் பகுதிகளுக்கும் ஒரே தடவையில் தேர்தலினை நடாத்தும் முகமாக ஏற்கனவே வடக்கு-கிழக்கில் கோரப்பட்ட 53 உள்ளூராட்சி சபைகளினதும் நியமனப்பத்திரங்களினை இரத்துச்செய்வதென அண்மையில் கூடிய அமைச்சரவை தீர்மானித்தது.

இதனையடுத்து இந்நியமனத்தின் அரசியல் அமைப்புத் தன்மை தொடர்பில் ஜனாதிபதி உயர்நீதிமன்றத்திடம் விளக்கம் கோரியிருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் பிரதேச நீதியரசர் தலைமையிலான குழு ஆராய்ந்து அதன் விசாரணைகளை நேற்று முன்தினம் நிறைவுசெய்தது.

அத்துடன், மதுமீதான இரகசியத் தீர்ப்பை சபாநாயகருக்கும், ஜனாதிபதிக்கும் அனுப்பிவைத்துள்ளது. (க-4)

CARITAS - HUDEC - JAFFNA



VACANCY

**1. Secretary**

To work in full partnership with Caritas Office Manager in Program Activities. The post holder will have to undertake the following activities.

Base Station: Jaffna

Main Duties:

* The post holder reports directly to the Director of Caritas-Hudec-Jaffna & the office Manager.
* Assists the Management on all secretarial duties & programmatic matters
. compilation of beneficiaries' data (livelihood, housing, and mic ro-finance), drafting letters independently etc.
* Translate documents to Tamil or English
* Prepare the minutes of weekly coordination planning Meetings.
* Maintain address lists and contact numbers of national and international staff and other essential telephone numbers of organizations, hotels and services useful for the programme.
* Assist the Senior Construction Managers in correspondence, reporting, letter drafting or contracts to the finance manager with external organizations, governments, banks, supplier's beneficiary groups, including the related e- mail.

**Requirements.**

* Good command of English
* Should have Secretariat/administrative background.
* Advanced computer skills in Excel (spreadsheet, data base management) word (reporting, graphs)& internet email.
* Ability to work independently.
* Excellent analytical skills.
* Good team player.

Caritas-Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV & motivation letter including your contact no. & minimal two references to the following address, latest by

28 January 2006

Father Jeyakumar
Caritas-Hudec
14 Mathew's Road, Deogu Street,
Jaffna.

or E-mail: hudec@sltnet.lk

(C-அ-123)

நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
நாடொறு நாடு கெடும். -குறள்

வலம்புரி

## யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் கொலைகள் அரசே பொறுப்பேற்க வேண்டும்

கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுவரும் கொலைச் சம்பவங்கள் ஒடும் இரத்தத்தை உறையவைத்துள்ளன.

படையினரின் கட்டுப்பாட்டுக்குள் யாழ்ப்பாணம் இருப்பதாக கூறிக்கொள்ளும் அரசு இங்கு இடம்பெறும் கொலைகள் குறித்து மௌனம் சாதிக்கின்றது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் யுத்தநிறுத்தம் செயலிழந்து போயிற்று.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை மாற்றியமைக்கவேண்டுமெனக் கூறும் மகிந்தவின் சிந்தனை மரணங்களையே மலிய வைத்துள்ளன.

ஒரு நாட்டின் ஜனாதிபதியாக இருக்கின்றவர் அனைத்து மக்களையும் சம கண் கொண்டு பார்க்கவேண்டும்.

இன-மத-மொழி ரீதியான வேறுபாடுகள் அதனூடான பக்க சார்புகள் யாவுமே அமைதிக்கான ,சமாதானத்திற்கான வழியாக இருக்க மாட்டாது.

பேரினவாத சிந்தனையாளர்களுடன் கூட்டுச் சேர்ந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் அவலங்கள் குறித்து இதுவரை எதுவுமே பேசவில்லை.

தமிழர்கள் என்ற ஒரே காரணத்தை தவிர வேறு எதனையும் மகிந்தவின் அமைதிக்கான காரணமாக கூறமுடியாது.

இலங்கை என்ற ஒற்றை ஆட்சிக்குள் தமிழ் மக்களை அடக்கவேண்டுமென நினைக்கின்ற அரசுக்கு தமிழர்கள் எதிர் நோக்கும் அவலங்களுக்கு தீர்வுகாண வேண்டுமென்ற நினைப்பும் இருக்கவேண்டும்.

இதனை விடுத்து தமிழர் தாயகம் முழுவதிலும் படையினரைக் குவித்துவிட்டு ,உயிருக்கு எதுவித உத்தரவாதமும் வழங்காமல் இருப்பது எவ்வகையில் நியாயமாகும்.

ஜனாதிபதி மகிந்த உள்ளிட்ட ஆளும்தரப்பினர் தமிழர்களின் போராட்டத்தை நசுக்குவதை இலக்காகக் கொண்டு திட்டங்களைத் தீட்டுகின்றனர்.

தமிழ் மக்களை ஆயுத முனையில் -உள ரீதியாக பாதிக்கவைத்து அவர்களின் எதிர்கால வாழ்வியலையே கேள்விக்குறியாக்கும் நிலைமையை தோற்றுவிப்பதே அவர்களின் நோக்கமாகும்.

இலங்கைத் தீவில் அனைத்தின மக்களும் உரிமையோடு வாழவேண்டும்-பாதுகாப்பு -பாதுகாப்புப் படையென்பது ஒருபகுதி இனத்திற்கானதல்ல என்ற உண்மையை யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள படையினர் சிந்திக்கவேண்டும்.

தமிழ் மக்கள் படையினருக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் அவர்கள் தமது உரிமைப்போராட்டத்திற்கு தடையாக இருப்பவர்களை எதிர்க்கின்றார்கள் இதுவே உண்மை.

போராட்டம் நடைபெறுகின்றதென்பதற்காக அதனை தவறான கண்கொண்டு பார்ப்பது நியாயமாகாது. காலா காலமாக நசுக்கப்பட்ட தமிழினம் ஆயுதம் ஏந்த வேண்டிய சூழ்நிலைக்கு ஏன் வந்தது?

அதற்கான காரணம் யார் என்ற உண்மைப்பாடுகள் உணரப்படவேண்டியவை.

ஆக படையினரின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருப்பதாக கூறும் போது இங்கு நடைபெறுகின்ற கொலைகளுக்கு அரசும் படைகளுமே பொறுப்புக் கூறவேண்டும்.

# பாடசாலை மாணவர்களுக்கு விசேட சேமிப்பு திட்டம்

## இலங்கை வங்கியால் 7 பாடசாலைகளில் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

மாணவர் மத்தியில் சேமிப்புப்பழக்கத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை இலங்கை வங்கி மேற்கொண்டு வருகிறது. இலங்கை வங்கியின் மாணவர் சேமிப்பு பிரிவு உருவாக்கியுள்ள இத்திட்டத்தில் முதற் கட்டமாக சுண்டுக்குளி மகளிர் கல்லூரி , வேம்படி மகளிர் கல்லூரி , திருக்குடும்ப கன்னியர் மடம், சென்பற்றிக்ஸ் கல்லூரி,யாழ். இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, பரியோவான் கல்லூரி ஆகிய எழு பாடசாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பாடசாலைகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

தற்பொழுது மேற்படி 7 பாடசாலைகளிலிருந்து 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் இத்திட்டத்தில் இணைந்துள்ளார்கள் எனவும், இத்திட்டம் படிப் படியாக நாடளாவியரீதியில் அனைத்துப் பாடசாலைகளில் அமுல் படுத்தப்படவுள்ளதாகவும் பாடசாலை சேமிப்பின் இணைப் பதிகாரி வீ. ஆர்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் படி, இலங்கை வங்கியில் இதற்கான சேமிப்புக்கணக்கில் 5 ஆயிரம் ரூபா வைப்புச் செய்த மாணவர்களுக்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான காப்புறுதிகள் இலங்கை வங்கியால் வழங்கப்படுவதுடன் அவற்றுக்கான கட்டுப்பணமும் அதே வங்கியிலேயே கட்டப்படும்.

இத்திட்டத்தில் இணையும் மாணவர்கள் தமது சேமிப்புத்தொகையை 18 வயது பூர்த்தியான பின்னரே பெற்றுக் கொள்ள முடியும் .

இத்திட்டத்தில் இணைந்து காப்புறுதி பெற்றுள்ள மாணவர்கள் விபத்து, சத்திரசிகிச்சை போன்றவற்றுக்காக அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் பட்சத்தில் அவர்களுக்கு தினம் ஒன்றுக்கு ரூபா 350 வீதம் ஒரு மாதத்திற்கு வழங்கப்படும் எனவும் காப்புறுதி செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோருக்கும் விபத்து உதவியாக மேற்படி தொகை வழங்கப்படும் எனவும் தெரிகிறது.

இத்திட்டத்தில் இணைந்துள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் இருந்து 11பேர் கொண்ட நிர்வாகக்குழுவொன்று அமைக்கப்பட்டு அவர்கள் மூலமாகவே இத் திட்டத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இக்குழுவில் நியமனம் பெறும் மாணவர்கள் க.பொ.த. உயர் தரத்தில் வணிகப் பிரிவில் கல்வி பயில்பவர்களாக இருக்கவேண்டும். இக் குழுவின் கால எல்லை ஒருவருடமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் இணைந்துள்ள மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகும் நேரத்தில் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களாக இருப்பின் அவர்களுக்கு இலங்கை வங்கியூடாக 6 மாத காலத்திற்குள் வங்கித் தொழிலில் பயிற்சி வழங்கப்படும் எனவும், இக்காலத்தில் அவர்களுக்கு மாதாந்தம் 7ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படும் எனவும், பயிற்சி முடிந்ததும் இலங்கை வங்கியில் ஏற்படும் வெற்றிடங்களுக்கு இவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிகிறது.

பாடசாலை நிர்வாகக்குழு உறுப்பினராக இருந்த மாணவர்களுக்கு இந்நியமனங்களில் முன்னுரிமை அளிக்கப்படும்.

பாடசாலை நிர்வாகக் குழுவில் இடம்பெற்ற மாணவர்களுக்கு 6 மாத கால பயிற்சி முடிவில் இலங்கை வங்கியின் தலைமை அலுவலகத்தால் சான்றிதழ்கள் வழங்கப்படும். இச் சான்றிதழ்கள் தொழில் வாய்ப்பின் போது முன்னுரிமையுடன் கவனிக்கப்படும்.

இத்திட்டத்தில் மாணவர்கள் இணைவதன் மூலம் சேமிப்பு, காப்புறுதி மூலம் கனிசமான பணத்தைப் பெறுவதுடன் இலங்கை வங்கியில் தொழில் வாய்ப்புப்பெறும் வசதியும் ஏற்படும் என இணைப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (து-132-133)

# ஜோசப் எம்.பியின் படுகொலையைக் கண்டித்து தமிழ்க்கட்சிகள் பாராளுமன்றில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளுக்கான விசேட சட்டமூலம் அரசியல் யாப்பிற்கு முரணானதல்ல என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் இந்தத்தீர்ப்பை சபாநாயகர் டபிள்யு. ஜே.எம். லொக்குப்பண்டார நேற்று பாராளு மன்றத்தில் தெரிவித்தார்.

தேசிய தொழில் முயற்சியாளர் அபிவிருத்தி அதிகார சபையை அபிவிருத்தி செய்வதற்கான சட்டமூலம் அமைச்சர் றோகித போகல்லாகமவினால் நேற்று பாராளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் சட்டமூலத்தின் மூலம் நாட்டின் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்கள் பெரும்நன்மை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில் நேற்று பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பமாகியபோது பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலையைக் கண்டித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக பாராளுமன்ற அமர்வுகள் சிறிது நேரம் குழப்பமடைந்தன.

சபா நாயகர் ஆர்ப்பாட்டத்தை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தார். எனினும் அவரது வேண்டுகோளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பொருட்படுத்தவில்லை.

இதன் காரணமாக பாராளுமன்றக் கூட்டத்தொடரை பத்து நிமிடங்களுக்கு ஒத்திவைக்க நேர்ந்தது.

இதன் பின்னர் கட்சித்தலைவர்கள் கூட்டம் இடம் பெற்றது. மீண்டும் பாராளுமன்ற அமர்வுகள் 10.30 மணியளவில் ஆரம்பமானபோது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மீண்டும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணியும் ஆர்ப்பாட்டத்தில் இணைந்து கொண்டன. சிங்கள அரசே சமாதான தூதன் ஜோசப் பரராஜசிங்கத்தை ஏன் கொன்றாய்? ஈ.பி.டி.பி., புளொட் ஆகியவற்றிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும் சிங்கள அரசே! தமிழ் ஊடகவியலாளர்களை அடித்து சித்திரவதை செய்யாதே, கொலை செய்யாதே! தமிழ் மக்களை அடித்து சித்திரவதை செய்தும் ,அச்சுறுத்தியும் , கடத்திக் கொலை செய்தும்,சுட்டுக்கொன்றும் , பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியும் தமிழ் மக்களின் குடிமனை களை ஆக்கிரமித்து வரும் இராணுவம் உடனடியாக அவற்றை நிறுத்தி மக்கள் வாழ்விடங்களில் இருந்து வெளியேற வேண்டும் என்று பிரதான கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளைஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் தாங்கியிருந்தனர்.

அத்துடன் அவர்கள் இராணுவத்தளபதி சரத்பொன் சேகாவுக்கு எதிராகவும் கோசங்களை எழுப்பினார்கள். யாழ். பல்கலைக்கழக மாணவர் மீது ஏன் இராணுவ வன்முறையை ஏவி விட்டாய்? கல்விமான்களை ஏன் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கினாய்? தமிழ் மாணவர்களின் கல்வியை ஏன் சீரழிக்கின்றாய்? இலங்கையில் ஜனாதிபதி யார்? சரத் பொன்சேகாவா ? மஹிந்தராஜபக்ஷவா? ஆகிய கோஷங்கள் எழுப்பப்பட்டன இதேவேளை, பாராளுமன்றம் மீண்டும் இன்று கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-7)

## ஜோசப்பின் இடத்திற்கு ஒருவரை நியமியுங்கள்!

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் வெற்றிடத்திற்கு தகுதிவாய்ந்த ஒருவரை நியமிக்குமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல்கள் ஆணையாளரைக் கேட்டுள்ளார். பாராளுமன்ற செயலாளர் நாயகம் பிரியாணி விஜயசேகர இது தொடர்பாக எழுத்துமுலம் அறிவித்துள்ளதாக தேர்தல் ஆணையாளர் செயலகம் தெரிவித்துள்ளது .

இது தொடர்பாக அரசாங்க வர்த்தமானிமுலம் அறிவிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிக்கு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார். (க-7)

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



இநதப் பிரபஞ்சம் நாம் அனுபவிப்பதற்காகவே உள்ளது. ஆயினும் ஒன்றையும் வேண்டாதே. ஆசைப்படுவது நம்மை பிச்சைக்காரனாக் குகிறது. நாம் அரசிளங குமாரர்கள் பிச்சைக் காரர்கள் அல்ல. பிறரை கண்டிப்பதெல்லாம் தன்னைத் தானே கண்டித்துக் கொள்வதாகும்.

சுவாமி விவேகானந்தர்

# யாழ். நகரில் குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் மின்சார நிலைய வீதியில் நேற்று நண்பகல் 12.40 மணியளவில் 512 ஆவது படைப்பிரிவின் இராணுவ முகாமின் முன்னரங்கக் காவலரண் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இத்தாக்குதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தனியார் பேருந்துத் தரிப்பிடத்தில் நின்றிருந்த பேருந்துகளின் கண்ணாடிகள் நொருங்கின.

நகரில் பெரும் பதற்றம் நிலவியது. மக்களின் நடமாட்டம் குறைந்தது. கடைகள் பூட்டப்பட்டன. ஒரு மணித்தியாலத்தின் பின் இயல்புநிலை திரும்பியது.

(இ-4,131,132)

## இனி ஒருபோதும்..

செல்லப் போவதில்லை.

உடனடியாக சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்படும். வடக்கு - கிழக்குப் பிரச்சினைகளுக்கு ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து கட்சிகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் சர்வகட்சிக் குழுவொன்றின்மூலம் தீர்வு காணப்படும். அனைத்து தீர்மானங்களும் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படும் மக்களுக்குத் தெரியாமல் திருட்டு ஒப்பந்தங்கள் செய்யப்படமாட்டாது.

தமிழ் - சிங்கள - முஸ்லிம் அனைத்து மக்களினதும் இல்லாதுபோன உரிமைகளை மீண்டும் பெற்றுத் தருவோம் என்றார் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே. (இ-4)

## திருமலையில்...

திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இயல்புநிலை ஏற்பட்டவுடன் வழமையான கண்காணிப்புப்பணிகள் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# சரசாலையில் இராணுவ டிரக்டர் கிளைமோரில் சிக்கியது; ஒருவர்பலி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சரசாலைப் பகுதியில் உழவு இயந்திரமொன்றில் பயணம் செய்த இராணுவத்தினர் மீது நேற்றுப் பிற்பகல் 1.15 மணியளவில் கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். அத்துடன் இரண்டு சிப்பாய் கள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மூன்று இராணுவத்தினருடன் சென்ற உழவு இயந்திரமே கிளைமோர் தாக்குதலில் சிக்கியதாக இராணுவத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து மட்டுவில் சரசாலைப் பகுதியெங்கும் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

சம்பவத்தையடுத்து வீதியால் சென்ற பலர் இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. அப்பகுதியெங்கும் பெரும் பதற்றம் நிலவியது. இதேவேளை சரசாலை கிளைமோர்த் தாக்குதலை தாமே மேற்கொண்டதாக பொங்கியெழும் மக்கள்படை உரிமை கோரியுள்ளது.

(இ-4,132,133)

# ராணுவக் காடைத்தனம்...

எமது அப்பாவித் தமிழ்பேசும் மக்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுகின்றனர். இராணுவத்தினரது நெருக்குவாரங்களும், நெருக்கடிகளும், அச்சுறுத்தல்களும் அதிகரித்துவருகின்றன.

நாளாந்தம் எமது மக்கள் கொல்லப்படுகின்ற சூழல் உருவாகியுள்ளது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் இருந்தும் இடம்பெயரவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

யுத்தகால நெருக்கடிபோலவே பாரிய அச்சுறுத்தலை, பாரிய கொலை நடவடிக்கைகளை எமது மக்கள் மீது இராணுவத்தினர் கட்டவிழ்த்து விட்டுள்ளார்கள் என்பதை இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

மிகமோசமானநிலை உருவாகிக்கொண்டிருப்பதை நோர்வேத் தரப்புக்கு எடுத்து விளக்கியுள்ளோம். யுத்தநிறுத்த உடன்படிக்கையை அமுலாக்குவதுதான் எல்லாவற்றுக்கும் தீர்வு என்பதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்.

அதையே இன்றும் வலியுறுத்துகின்றோம். ஏனெனில் எமது மக்களின் வாழ்க்கையில் இயல்புநிலையை கொண்டுவர வேண்டும்.

இராணுவ நடமாட்டத்தை குறைத்து நெருக்குவாரங்களையும் அச்சுறுத்தலையும் குறைத்து நெருக்கடிகளை இல்லாமல் செய்வதன்மூலம்தான் நிலைமைகளை கட்டுப்பாட்டில் கொண்டுவரமுடியும்.

தற்போது அனைத்து இடங்களிலும் யுத்தகாலம் போலவே இராணுவம் தனது முழுக்காடைத் தனங்களையும் செயற்பாடுகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இவற்றுக்கு உடனடியாக தீர்வுகாணப்படவேண்டும். இல்லையெனில் மக்களின் கொந்தளிப்பான நிலைப்பாடுகளை மாற்றுவது கடினமாக இருக்குமென்று தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார். (இ-4,8)

# திருமலையில் குண்டு...

படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்கி பொதுமக்கள் இருவர் பலியாகியுள்ளனர்.

இதேவேளை இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொதுமக்கள் இருவர் உயிரிழந்ததாக கூறப்படும் குற்றச்சாட்டை இராணுவப் பேச்சாளர் அத்துல ஜெயவர்த்தன மறுத்துள்ளார். இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் ஒருவர் செல்வநாயகபுரம் வாசியான செல்வராசா செல்வக்குமார் (வயது 28) என அடையாளம் காணப்பட்டுள்ளார். மற்றைய நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இச்சம்பவத்தில் காயமடைந்த நால்வர் திருமலை அரசினர் பொது மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். (இ-4)

## தலைவர் பிரபா....

திட்டமிட்டபடி நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்மின் இலங்கை விஜயம் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் சமாதான முயற்சி பாரிய பின்னடைவையும், யுத்தத்தினை நோக்கியும் நகர்ந்து செல்லும் ஆபத்தான சூழலில் அதனைத் தடுத்து நிறுத்தும் வகையில்; இறுதிக்கட்ட முயற்சியாக எரிக் சொல்ஹெய்மின் நடவடிக்கைகள் இலங்கையில் இடம்பெறவுள்ளது.

இந்த அடிப்படையில் இலங்கையின் அரச தலைவர்களான ஜனாதிபதி உட்பட அமைச்சர்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் உட்பட முக்கிய பிரமுகர்களையும் சந்திக்கும் நிகழ்ச்சி நிரலுடனேயே எரிக் சொல்ஹெய்ம் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 23 ஆம் திகதி வன்னிக்கு வரும் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சுநடத்துவாரென விடுதலைப் புலிகளின் தகவல்கள், சந்திப்பு நிகழப்போவதினை உறுதிப்படுத்தியுள்ளன.

இச்சந்திப்பின்போது தமிழர் தாயகப் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கின்ற இன்றைய நெருக்கடி நிலைமை குறித்து விசேடமாக ஆராயப்படுவதுடன் நேரடிப் பேச்சுவார்த்தையினை ஆரம்பிப்பதில் காணப்படும் தடைகளை அகற்றுவது குறித்தும் பேச்சுவார்த்தை இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தலைவருடனான சந்திப்பின்போது பேச்சுக்களில் பங்கேற்றும் வகையில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் லண்டனிலிருந்து இவ்வார இறுதியில் வன்னிக்கு வருவாரென்று தகவல்கள் கூறுகின்றன. இவரின் வருகைக்கான ஏற்பாடுகளை நோர்வே அரசும், இலங்கை அரசும் மேற்கொள்ளவுள்ளதாக தெரியவருகிறது. (இ-4,8,2,16)











கண்ணீர் அஞ்சலி

17.01.2006 செவ்வாய்க்கிழமை காலமான

பாலசூரியரின் அன்புத் தந்தை

பேரம்பலம் அருணாசலம்

(சாம்பு வீதி, வலந்தலை, காரைநகர்)

அவர்களின் மறைவினால்

துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு

எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்

தெரிவித்துக்கொள்வதுடன்,

அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்

இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இ.ச.பேரம்பலம் சகநிறுவனத்தாரும்,

சேவையாளர்களும்.

50,52 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C-178)

அடகுபொருள் மீட்டல்/ ஏல விற்பனைக்கான அறிவித்தல்

எமது வங்கி யாழ்ப்பாணக்கிளை மற்றும் சுன்னாகம் கிளையில் அடகுவைத்து ஒருவருட காலத்தினுள் மீட்கப்படாத அடகு பொருட்கள் முன்னர் அறிவிக்கப்பட்டமைக்கமைவாக 21.01.2006 சனிக்கிழமை 9.30 மணிக்கு யாழ். கிளையில் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படும்.

- முகாமையாளர்

ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்

யாழ்ப்பாணம்

(C-177)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.